விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 02 வியாழக்கிழமை (15.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

# கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்துவிடவே இலங்கை விரும்புகின்றது

## அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் கருத்து

(கொழும்பு)

கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான அனுபவங்களை மறந்து விடவே இலங்கை விரும்புவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித்துள்ளார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியில் வாகன விபத்து
## 11 பேர் காயம்; மூவர் கவலைக்கிடம்

(கொழும்பு)

ஏ-9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பதினொரு பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ்.-கண்டி ஏ-9 வீதியின் கொக்கலிய பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள இராணுவ முகாமுக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதி வேகமாகச் சென்ற வாகனம் கட்டுப்பாட்டையிழந்து மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியது.

இச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் மூவரின் நிலைமையை கவலைக்கிடமாகவுள்ளது.

அதிவேகமாக வாகனத்தைச் செலுத்திய காரணத்தினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ந-5)

## இலங்கைப் படுகொலை தொடர்பான கருத்தரங்கு மாநாடு இன்று டெல்லியில்

(டில்லி)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்கும் இடையே நடைபெற்ற போரில் மறைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்பான கருத்தரங்கு மாநாடு டெல்லியில் இன்று நடைபெறவுள்ளது.

டெல்லி பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் மற்றும் டப்ளின் அமைப்பு இணைந்து இந்த மாநாட்டை நடத்துகின்றது.

அயர்லாந்தில் உள்ள டப்ளின் தீர்ப்பாயம் இலங்கை போர் குற்றங்கள் தொடர்பான விசாரணையை நடத்திவருகிறது.

இந்நிலையில் இது தொடர்பான கருத்தரங்கு மாநாட்டை இத்தீர்ப்பாயம் டெல்லியில் இன்று நடத்துகிறது.

இதில் டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதி ராஜிந்தர் சச்சார், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் கிருஷ்ண ஐயர், அனைத்துலக மனித உரிமை கழகத்தின் விராஜ் மெண்டிஸ், முன்னாள் எம்.பி.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் பேசுகின்றனர்.

பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்நாடு பியூசிஎல் தலைவர் சுரேஷ், பியுசிஎல் முன்னாள் தலைவர் கண்ணபிரான், முன்னாள் சண்டிகர் நீதிபதி அஜித் சிங் பைன்ஸ், புரட்சிகர எழுத்தாளர் சங்க கவிஞர் வரவர ராவ், (14 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் க.பொ.த. (உயர்) தரப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உயிரியல் II

## தமிழ்க் கட்சிகளுடனும் பேச கூட்டமைப்புத் தயார்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் மாத்திரமல்லாது ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராகவுள்ளது என சுரேஸ் பிரேமசந்திரன் தமிழ்மிரர் இணையத்தளத்துக்குத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந் நிலையில் கூட்டமைப்பின் நிலைப்பாடு குறித்துத் தமிழ்மிரர் இணையத்தளம் சுரேஸ் பிரேமசந்திரனிடம் கேள்வி எழுப்பியது.

தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமான தீர்வு கிடைப்பதற்கு வழி கிடைக்குமானால் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதில் எந்தவிதத் தடையும் இல்லை என்று அவர் பதிலளித்தார். (ந-5)

## போரில் ஏற்பட்ட மனித அழிவுக்கு அரசாங்கமும் புலிகளுமே காரணம்

### பிரி.தொழிற் கட்சி கூறுகின்றது

(லண்டன்)

விடுதலைப்புலிகளுடனான போரின் இறுதி நாள்களில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து முழுமையானதும் சுதந்திரமானதுமான விசாரணைகளை இலங்கை மேற்கொள்வதற்கு பிரித்தானியத் தொழிற் கட்சி தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுக்கும் என அக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் மீள் நிர்மாணத்திற்கும் தற்போதைய மனித நேய நெருக்கடிகளைக் களைவதற்கும் தன்னாலான சகல முயற்சிகளையும் முன்னெடுக்கத் தொழிற் கட்சி அரசாங்கம் உறுதி கொண்டிருப்பதாகவும் இவ் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் போரின் போது ஏற்பட்ட மனித அழிவுகளுக்கு இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவை எதிர்க்கட்சி தலைவராக நியமிக்குக

### ஐ.தே.முன்னணியின் புதிய எம்.பிக்கள் வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவராக சரத் பொன்சேகாவை நியமிக்கும்படி ஐக்கிய தேசிய முன்னணியில் தெரிவாகியுள்ள புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அது குறித்த கலந்துரையாடல்கள் நடந்து வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்திற்கு மிகக் கடினமான சவாலாக இருக்கக் கூடிய ஒருவரே எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என அவர்கள் கூறியுள்ளனர்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்குப் பலராலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டிருந்த சரத் பொன்சேகாதான் இதற்குத் தகுதியானவர் என ஐக்கிய தேசிய முன்னணியினர் கூறுகின்றனர்.

ஐ.தே.மு. ஆனது வெற்றிகரமானதாக வளருமிடத்திலேயே சரத் பொன்சேகாவின் விடுதலை சாத்தியப்படும். பொதுத் தேர்தலின் போது கட்சி உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு சரத் பொன்சேகா உயிர் கொடுக்கக் கூடியவர்.

மேலும் அவ (14 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் எண்ணிக்கை 40

(கொழும்பு)

புதிய அமைச்சரவை உறுப்பினர்களை 35 இல் இருந்து 40ற்குள் கட்டப்படுத்தவும் அதற்கமையவே பிரதி அமைச்சர்களை நியமிக்கவும் மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்திற்கு முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் எவருக்கும் அமைச்சர் பதவியோ அல்லது பிரதி அமைச்சர் பதவியோ இம்முறை வழங்கப்படமாட்டாது எனவும் அவ் வட்டாரங்கள் கூறுகின்றன.

அதேவேளை அதிகளவு விருப்பு வாக்குகளைப் பெற்ற (14 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை அரசை ஆஸி. நம்புகிறதா? 'த ஏஜ்' அவுஸ்திரேலிய ஊடகம் கேள்வி

(சிட்னி)

ஊடகவியலாளர் நடத்தப்படும் முறைமையினைவைத்துக்கொண்டு சிறிலங்காவில் மனித உரிமை நிலைமைகள் எவ்வாறிருக்கிறது என்பதை சரியாகக் கூறிவிடலாம்.

ஆனால் அவுஸ்திரேலிய அரசாங்கம் இந்தவிடயத்தினை கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை என்று The Age என்னும் அவுஸ்திரேலிய ஊடகமொன்றின் தென்னாசிய செய்தியாளரான Matt Wade எழுதியுள்ளார்.

அவர் தொடர்ந்து எழுதி உள்ளதாவது,

சிறிலங்காவினது ஊடகவியலாளர்களின் பரிதாப நிலையினைச் சிறிதளவேனும் கருத்திலெடுக்காமலே அந்த நாட்டினைச் சேர்ந்தவர்களது அரசியல் தஞ்சக் கோரிக்கையினை ஏற்பதில்லை என்ற முடிபினை அவுஸ்திரேலிய அரசாங்கம் எடுத்திருக்கிறது.

பல வருடங்களாகத் தொடர்ந்த போர் 10 மாதங்களுக்கு முன்னர் முடிவுக்கு வந்துவிட்ட பின்னரும் சிறிலங்காவில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிடுவது ஆபத்தானதொரு செயலாகவே அங்கு இருந்து வருகிறது.

தமக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக அண்மைய வாரங்களில் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

ஊடகங்கள் வாயிலாக சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுவது அபாயம் நிறைந்தது எனக்கருதி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கும் சிறிலங்காவைச்சேர்ந்த ஏனைய ஊடகவியலாளர்களுடன் இறுதியாக நாட்டை விட்டு வெளியேறியிருக்கும் இவர்களும் இணைந்து கொண்டார்கள்.

கடந்த 18 மாதங்களாக சிறிலங்காவில் எனது பணியினை மேற்கொள்ளும் போது நான் சந்தித்த பல ஊடகவியலாளர்களும் இதற்குள் அடங்குவர்.

நான் சிறிலங்காவில் பணிசெய்த போது கடந்த சனவரியில் எனது மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்த ஊடகத்துறையினைச் சேர்ந்த ஒருவர் ஊடகவியலாளரான தனது துணைவியாருடனும் குழந்தையுடனும் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தனக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டிருப்பதை உணர்ந்து கொண்ட அவர் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு தீர்மானித்திருக்கிறார்.

இலங்கையிலிருந்து வரும் புகலிடம் கோருவோரை ஏற்றுக் கொள்ளும் ஐரோப்பிய நாடொன்றில் அவரது குடும்பம் தற்போது வசித்துவருகிறது. இலங்கைக்கு எப்போது நான் திரும்புவேன் என உறுதியாக கூற முடியாது என அவர் தெரிவித்தார்.

The Age ஊடக நிறுவனத்துக்காக பணிபுரிந்த ஒளிப்படக்கலைஞர் ஒருவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்படுகிறார் என குற்றம் சுமத்தப்பட்டதை தொடர்ந்து இந்தியாவுக்கு தப்பிச்சென்றார்.

கடந்த யூன்மாதத்தில் அரசாங்கத்தின் மீது குறைகண்டு பத்திகளை வெளியிட்டுவந்த சிலுமின என்ற சிங்கள பத்திரிகையின் ஆசிரியரான பொட்டல ஜெயந்த இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு அடித்து துன்புறுத்தப்பட்டிருந்தார்.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து பத்திரிகை ஆசிரியரான பொட்டல ஜெயந்த நிரந்தரமாகவே உடல்வலு இழந்தார். இலங்கையிலிருந்தவாறு தனது ஊடகத் தொழிலை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக ஆறு மாதங்களாக தொடர்ந்தும் அங்கேயே இருந்தார்.

ஆனால்ஊடகத்துறையில்தொடர்ந்தும் இருப்பதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை கருத்தில்கொண்டு அவர் அண்மையில்வெளிநாடொன்றுக்கு சென்றுவிட்டார்.

இதுபோலவே உயிர் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற காரணத்தினால் பலவருடங்களாக ஊடகவியலாளராக செயற்பட்ட இன்னொரு ஊடகவியலாளர் கடந்த வாரம் நாட்டைவிட்டு வெளியேறி விட்டார்.

அதேநேரம் கடந்த சனவரி 24 ஆம் திகதி காணாமல்போன பிரகீத் எக்னலிகொட என்ற ஊடகவியலாளரது நிலைமை தொடர்பில் கடுமையான கரிசனை செலுத்தப்படுகிறது.

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து காணப்படுவதாகச் சிலர் கூறுகிறார்கள்.

சனவரியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் லங்கா இரித என்ற சிங்களபத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறிமல்லவத்தை கைது செய்யப்பட்டு பல வாரங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

பிரதான எதிர்க்கட்சியுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் இந்தப் பத்திரிகையினை மீளவும் ஆரம்பிப்பதற்குக் கடுமையான கட்டுப்பாடுகளின் பின்னர் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிபடைந்திருக்கும் நிலையில் நாட்டினது ஊடக சுதந்திரம் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என சிறிமல் வத்தை அச்சம் தெரிவிக்கிறார். அதிபர் ராஜபக்ஷவின் தலைமையி லான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றிபெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நிலைமைகள் சீராகும் என நாம் நம்பிக்கையுடன் இருக்கும் அதேநேரம் ஏற்படக்கூடிய மோசமான நிலைமையினையும் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம் என அவர் கடந்த ஞாயிறன்று The Age இடம் தெரிவித்திருந்தார்.

சிறிலங்காவினது புலனாய்வு அமைப்பினரால் தயார் செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் முதன்மையான தனிநபர்களது பெயர்கள் உள்ளடங்கிய கொலைப்பட்டியல் தொடர்பாக தனது கரிசனையை வெளிப்படுத்தி ஊடகவியலாளர்களின் சர்வதேசக் கூட்டமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

ஊடகங்களின சுதந்திரமான குரலை கொடுங்கரம்கொண்டு அடக்கும் அதேநேரம் கருத்துச் சுதந்திரத்தினை முற்றாக மறுக்கும் ஓர் அரசாங்கத்தின் கதையினை ஏற்றுக்கொள்ளும் அவுஸ்திரேலியா மற்றும் தொடர்புடைய ஏனைய நாடுகளின் அரசாங்கங்கள் சிறிலங்காவில் எந்தப் பிரச்சினையும் இல்லையென வாதாடுகின்றார்கள்.

சிறிலங்காவினது மக்கள் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்சினைகளை இவர்கள் கவனத்தில் எடுக்க தவறிவிட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

பலவருடங்களாக ஊடகவியலாளராக இருக்கும் ஒருவர் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதைத் தொடர்ந்து நாட்டைவிட்டு வெளியேறி இருக்கிறார்.

இந்தநிலையில் சிறிலங்காவில் நிலைமைகள் எவ்வித பிரச்சினைகளும் இன்றி ஏற்புடையதாக இருக்கிறது என எவ்வாறு கூறமுடியும்.

அதிகாரத்தின் மீதான ஆளும் அரசாங்கத்தின் பிடி மேலும் இறுகி இருக்கும் நிலை தனது அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டவர்கள் என அரசு கருதும் ஊடகவியலாளர்கள் வரும் வாரங்களில் அல்லது மாதங்களில் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படும் அபாயம் அதிகமுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புத்தாண்டில் விபத்து 286 பேர் காயம்

(கொழும்பு)

சித்திரை புதுவருட பண்டிகை கால விபத்துகளினால் கடந்த 24 மணித்தியாலங்களில் 286 பேர் காயமடைந்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

பல்வேறு விபத்துகளினால் பாதிக்கப்பட்ட 286 பேர் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

காயமடைந்தவர்களில் 96 பேர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருவதாக பிரதி வைத்திய பணிப்பாளர் பிரசாத் ஆரியவன்ச தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களில் வீதி விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 94ஆகும்.

பட்டாசு கொளுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களினால் ஏனையவர்கள் காயமடைந்துள்ளனர்.

அதேவேளை கடந்தகாலங்களைவிட இந்தவருடம் விபத்துக்களில்காயமடைந்தவர்களின்தொகை அதிகம் என வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)


KNOWLEDGE UNIVERSE

Malaysian Soft skills Development Centre

Certificate in Office Management தமிழ் மொழி மூலம்

பல்தேசியக்கம்பனிகளில்(MNC) உயர்பதவி வகித்த பயிற்றுனரிடமிருந்து வேலைவாய்ப்பை தேடும் இளைஞர் யுவதிகளிற்கு வேலைவாய்ப்பு வழங்கும் 40 மணி நேரப் பயிற்சி நெறிகள். பயிற்சி முடிவில் உறுதிப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு .

இரண்டாவது பிரிவு ஆரம்பம் 19/04/2010 காலை 10.00 மணி

இலவச ஆலோசனைகளுக்கும் வழிகாட்டலுக்கும்: 0777-302882

50 ற்கு மேற்பட்ட பல்வேறுபட்ட தொழில் வெற்றிடங்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

Course contents :.Communication Skills . International Exposure . Leadership . Management Skills .Working Culture .Computer Skills ,Real Time Projects. Interview Skills .Stress Management .time management,. Goal setting,. Project planing .team work .Negotiation Entrepreneurship . Please.see full details at our web site.www/kugroup.info

பயிற்றுனர் :

S.Manimaraa B.A(Hon),Dip(Mkt),Dip(IT)
Certified Soft Skills Trainer (AMA-USA)



Career High Lights:

. Marketing Manager,Head-IT Department :Metropoint College,Malaysia
. Senior Course Consultant : Olympia College(Raffles Group,Singapore)
. Biz Development Director :Megaluts Solutions SDN BHD ,Malaysia
. Research Analyst and Beta Tester :Nokia,UK.
. Founder and Editor of the Hi Tech web mag :www.sysmbiandreams.com
. IT and Management Consultant : Lava Hospitals,Jaffna.

(C-058)

www.kugroup.info No 75,Temple Road,Jaffna (லவா வைத்தியசாலை மேல்மாடி)


## முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 7802 குடும்பங்கள் மீள்குடியமர்வு

### அரச அதிபர் இமெல்டா தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 7802 குடும்பங்களைச் சேர்ந்த் 23 ஆயிரத்து 233 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மேரி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிலும் மாந்தைகிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலும் நூறு வீதமான மக்களும் மீளக் குடியமர்ந்து விட்டார்கள்.

ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளர்பிரிவில்பன்னிரண்டுகிராமசேவையாளர் பிரிவு மக்களும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இங்கு கண்ணிவெடி அகற்றும் பகுதியில் படையினர் மற்றும் இந்திய நிபுணர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

கண்ணிவெடி அகற்றப்பட்ட பின்னர் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப் பட்டதும் அந்தந்தப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவார்கள்.

இதேவேளை கரைத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் வற்றாப்பளைக் கிராமத்தில் 519 குடும்பங்களைச்சேர்ந்த 1486 பேர் மீளக் குடிய மர்த்தப்பட்டுள்ளனர். (ந-14)


கண்ணீர் அஞ்சலி



வலம்புரிக் குடும்பத்தைச் சேர்ந்த திரு.க.பிரபாகரனின் அன்புத் மனைவி திருமதி பிறேமலோஜினி பிரபாகரன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

அவரின் இழப்பினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

-வலம்புரிக் குடும்பம்.

தேவை

நல்லூரிற்கு அருகாமையில் இயங்கும் பாமஸிக்கு, பான்ஸி, மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை.

தொடர்பு: 077 3689179

(H78)

# இன்று ஒரு தகவல்

## இலட்சியம்

ஓர் ஆச்சிரமம். அதனைச்சுற்றி நிறைய மாம ரங்கள் நின்றன. அவற்றில் மாம்பழங்கள் நிறைந்து காணப்பட்டன.

அந்த ஆச்சிரமத்தைக் கடந்து சென்றால் அங்கே ஒரு பள்ளிக்கூடம்.

தினமும் அந்த ஆச்சிரமத்தின் வழியாகத் தான் பிள்ளைகள் போவார்கள். வருவார்கள்.

காலையில் அந்த வழியாக மாணவர்கள் போவதையும் மாலையில் அவ்வழியாக அவர்கள் திரும்புவதையும் ஆச்சிரமத்தில் இருந்த ஒரு சந்நியாசி கவனித்துக் கொண்டிருப்பது வழக்கம். அந்த சந்நியாசிக்கு ஓர் ஆச்சரியம்! காலையில் மாணவர்கள் அவ் வழியாகப் போகும் போதுஅங்கேயிருந்த மாமரத்தைத்திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. ஒழுங்காகப் போவார்கள்.

ஆனால் மாலையில் திரும்பும் போது அப்படியில்லை. அந்தச் சமயத்தில் அவர்களுடைய குணம் முற்றிலும் மாறிவிடும்.

மாமரத்தைப் பார்ப்பார்கள். அதிலிருக்கும் கனிகளை கவனிப்பார்கள். ஆளுக்கொரு கல்லைக்கையில் எடுத்துக் கொண்டு அதனைக் குறி பார்த்து எறிவார்கள். பழங்கள் விழுந்ததும் ஓடி ஓடிப் பொறுக்கிக்கொள்வார்கள்.

ஒரே சிரிப்பும் கும்மாளமுமாக இருக்கும் சந்நியாசி யோசிக்க ஆரம்பித்தார்.

காலையில் ஒழுங்காகப் பள்ளிக்குப் போகும் மாணவர்கள் மாலையில் மட்டும் ஏன் இப்படிக் குறும்புக்காரர்களாக மாறி விடுகிறார்கள் என்று அவருக்குப் புரியவில்லை.

ஒருநாள் ஒரு மாணவனைக் கூப்பிட்டார். அவன் வந்தான்.

''தம்பி! காலையில் ஒழுங்காக அமைதியாகப் போகிறீர்கள். மாலையில் மட்டும் இப்படி கல்லெறிந்து குறும்பு செய்கிறீர்களே... ஏன்?'' என்று கேட்டார்.

அந்தச் சிறுவன் சொன்னான்.

"காலையில் நாங்க சரியான நேரத்துக்குப் பள்ளிக்கூடம் போகவில்லையானால் வாத்தியார் அடிப்பார். ஆனால் மாலையில் அப்படியில்லை. வீட்டுக்கு எப்பொழுது வேண்டுமானாலும் போகலாம். அதனால் மாம்பழத்தை பறித்து எடுத்துக் கொண்டு போகிறோம். "என்று சொல்லிவிட்டு அவன் ஓடி விட்டான்" சந்நியாசி சிந்தித்தார். அவருக்கு ஓர் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.

இந்தப் பிள்ளைகள் காலையில் இந்த வழியாகப் போகும் போது... அவர்களுக்கு முன்னால் ஒரு நோக்கம் இருந்தது. அதை அடைவதற்காக அவர்கள் செல்கிறார்கள். மாணவர்கள் திரும்பும் போது அது இல்லை. அதனால் இப்படி நடந்து கொள்கிறார்கள்"

இது நண்பர் ஒருவர் சொன்னகதை. இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் பொருந்தும்.

வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இல்லையானால் சிறியவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் பல தவறுகளைச் செய்து விடுகிறார்கள்.

இப்பொழுது சுவாமி விவேகானந்தர் சொன்ன வார்த்தைகளை யோசித்துப் பாருங்கள்.

" வாழ்க்கையில் இலட்சியம் கொண்டிருப்பவன் ஆயிரம் தவறுகளைச் செய்தால்... இலட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகளைச் செய்வான்" என்பது தான் விவேகானந்தர் சொன்ன கருத்து.

இதை என்னுடைய நண்பன் ஒருவனிடம் சொன்னேன். சொல்லிவிட்டு,பின்னர் சொன்னேன் .

"அதனால இனிமேல் இலஞ்சம் வாங்கும் பழக்கத்தை விட்டுவிடு" என்றேன்.

"அதெப்படி விட முடியும்? அதுதானே என் இலட்சியம்" என்கிறான்.

இவனெல்லாம் எந்தக் காலத்தில் திருந்துவது?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மீள் தேர்தலைக் கண்காணிக்க கொழும்பில் இருந்துவிசேட குழு

(கொழும்பு)

நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை, கும்புறுப்பிட்டி வாக்களிப்பு பிரிவுகளுக்கான மீள் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக கொழும்பில் இருந்து விசேட உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றை அனுப்புவதற்கு தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

மீள் தேர்தலை எவ்வித முறைகேடுகளுமின்றி நடத்துவதற்காகவே இந்த குழுவினர் அனுப்பி வைக்கப்படுவதாக தேர்தல்கள் செயலகப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள மீள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள நிலையங்களில் வெளிமாகாண உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட சில குழுக்கள் ஈடுபடுத்தப்படவுள்ளன.

மீள் தேர்தல் நடைபெறவுள்ள 37 வாக்களிப்பு பிரிவுகளில் தேர்தல் கடமைகளுக்காக 390 உத்தியோகத்தர்கள் தேவைப்படுவதாக செயலகம் கூறுகிறது.

பொதுத்தேர்தலின் போது குறிப்பிட்ட வாக்களிப்பு பிரிவுகளில் இடம்பெற்ற முறைகேடு காரணமாக அவற்றிற்கான முடிபுகளை இரத்துச் செய்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானிப்பார். (2-6)

# ஆனமடுவ இளைஞர் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ தேர்தல் தொகுதியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று நண்பகல் நூற்றுக்கணக்கான மக்கள் வீதி மறியல் போராட்டமொன்றை மேற் கொண்டனர்.

கொலையாளியை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு கோரி புத்தாண்டு தினத்தைக்கூட கொண்டாடுவதை நிறுத்திவிட்டு சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு ஆனமடு தேர்தல் தொகுதியில் உள்ள பரமாகந்த, இஹலதிவுல் புர என்னுமிடத்தில் சுமார் 7.45 மணியளவில் குறித்த இளைஞர் வெட்டப்பட்டும் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை புத்தளம் தொகுதி பொலீஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ் குழு சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. (2-6)

# ஜூன் மாத முதற்பகுதியில் வரவு செலவுத்திட்டம்?

(கொழும்பு)

எதிர்வரும் ஜுன் மாதத்தின் ஆரம்ப பகுதியில் அல்லது மே மாதத்தின் இறுதி பகுதியில் புதிய அரசாங்கத்தின் இவ்வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாதம் 30 ஆம் திகதியுடன் தற்போதைய கணக்கு வாக்கெடுப்பு முடிவுக்கு வருகின்றது. இந்நிலையில் ஜுன் மாதம் முதற் பகுதியில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படலாம் என அரசாங்க மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

எனினும் சிலவேளை வரவு செலவுத் திட்டம் மே மாதம் இறுதிப் பகுதியிலும் சமர்ப்பிக்கப்படலாம் என தெரிய வருகிறது.

இதேவேளை புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை எதிர்வரும் 21 அல்லது 22 ஆம் திகதி மாலை பதவியேற்றகலாம் என தெரிவிக்கப்படுகின்றது. 22ஆம் திகதி புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெறவுள்ளது.

நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் சில வாக்களிப்பு நிலையங்களில் எதிர்வரும் 20ஆம் திகதி மறு வாக்குப் பதிவு நடைபெறுகின்றது. அதனையடுத்தே 22ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகிறன்றது. (2-6)

# வீதியில் பாரிய குழி

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித ஜேம்ஸ் மகா வித்தியா லயத்திற்கு முன்பாக செல்லும் பிரதான வீதியில் பாரிய குழியொன்று ஏற்பட்டதால் அவ்வீதியால் பயணிப்போர் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

வீதியில் குழி ஏற்பட்டதால் போக்கு வரத்துக்கு மிகவும் தடையாக இருப்பதால் வாகனங்களில் செல்வோர் உட்பட பொது மக்களும் மாணவர்களும் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் விரைவுபடுத்தி வீதியை செப்பனிட்டு தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-22)

# இராசி பலன்

*15.04.2010*
*சித்திரை 2 வியாழக்கிழமை*
*பிரதமை முன்னிரவு 6.55 மணிவரை*
*அச்சுவினி மாலை 6.33 மணிவரை*
*இராகுகாலம் 1.34-3.04 மணிவரை*
*சுபநேரம் 7.34-9.04 மணிவரை*
*அமிர்த சித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் சந்திப்பு, சிந்தனை மிகுதி, போசன நன்மை, புதிய முயற்சி. |
| இடபம் | சயன சுகக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, திடீர்பயணம். |
| மிதுனம் | எதிர்பாராத நன்மை, உறவினர் வருகை, கீர்த்தி, விருந்துபசாரம். |
| கடகம் | சுப நிகழ்வு, பிறர் உதவி, முயற்சி கைகூடும், தனவருவாய். |
| சிங்கம் | புதிய திட்டமிடல், அச்சமான நிலை, திடீர்பயணம், பெரியோர் சந்திப்பு. |
| கன்னி | அபகீர்த்தி, பிரயாணபயம், காரிய தாமதம், போசன சுகம். |
| துலாம் | களஸ்திர நன்மை, அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், நல்ல செய்தி. |
| விருச்சிகம் | பணவருவாய், தொழில் முன்னேற்றம், தேகநலன், பிரயாண நன்மை. |
| தனுசு | புத்திரரால் கவலை, பணவிரயம், வியாபார விருத்தி, அதிக பிரயாசை. |
| மகரம் | கல்வியில் ஆர்வம், ரோக பயம், புதிய சிந்தை, நண்பர்கள் சந்திப்பு. |
| கும்பம் | தடைப்பட்ட காரியம், கைகூடும், புதிய பொருள் சேர்க்கை, கீர்த்தி உறவினர் வருகை. |
| மீனம் | கடின வார்த்தை, தனவிரயம், தொழில் ஆர்வம், முயற்சி தாமதம். |

**வளவன்**

# யாழ்ப்பாணத்தில் கூடுதலான வெப்பநிலை பதிவாகியுள்ளது

## காலநிலை அவதான நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நாட்டில் கூடியளவான வெப்ப காலநிலை நிலவுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது சூரியன் இலங்கைக்கு நேராகவுள்ளது. கச்சதீவு, அடம்பன் மற்றும் கிளிநொச்சி உள்ளிட்ட நகரங்கள் பலவற்றில் இன்று பகல் 12.11 மணிக்கு சூரியன் உச்சத்தில் இருக்கும் என்றும் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலை இவ்வாரத்தில் தொடர்ந்தும் நிலவும். இதனால் இரவு வேளைகளில் அதிகூடிய வெப்பநிலை நிலவும் நேற்றை தினம் ஆகக் கூடுதலான வெப்ப நிலை. அநுராதபுரத்தில் பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் , இரத்தினபுரி, பதுளை ஆகிய இடங்களிலும் கூடுதலான வெப்பநிலை பதிவாகியுள்ளது. அத்துடன் இன்று மாலை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடியுடன் கூடிய மழைபெய்யும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (2-4)

# இடம்பெயர்ந்த மக்களுக்கான இந்திய அரசாங்கத்தின் உதவிகள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்திய அரசாங்கம் மேலும் பல உதவிகளை வழங்கியுள்ளது.

இதற்கமைய சீமெந்து மற்றும் கூரைத்தகடுகள் முதலானவற்றை இந்திய அரசாங்கம் வழங்க முன்வந்திருப்பதாக தேசிய நிர்மான அமைச்சு தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட நிவாரணப் பொருட்கள் எதிர்வரும் வியாழக்கிழமை அன்று ஒப்படைக்கப்படவுள்ளது.

இதில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான 50 கிலோகிராம் எடை கொண்ட சீமெந்து இதற்கு மேலதிகமாக 2 ஆயிரத்து 600 எடை கொண்ட கூரைத்தகடுகள் வழங்கப்படவுள்ளன.

இந்திய அரசாங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்காக இதுவரையில் 610 மில்லியன் ரூபா பெறுமதியான உணவு உபகரணங்கள் முதலானவற்றை உதவியாக வழங்கியுள்ளது. (2-4)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(வேலணை)

தென்மராட்சி வரணி மாகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பழைய நிர்வாகத்தின் செயற்பாட்டு ஆவணங்கள்சமர்ப்பிப்பதுடன், புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் இடம்பெறவுள்ளதால் அன்றைய தினம் அனைத்துப் பழைய மாணவர்களையும் நலன்விரும்பிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர்கேட்டுக் கொள்கின்றார். (4-22)

## யாழில் சித்த மருத்துவத்தை மேம்படுத்தல் தொடர்பான திட்ட முன்வரைபு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்தமருத்துவ துறையை மேம்படுத்தும் நோக்கில் இம் மாவட்டத்தின் சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கம் தமது திட்ட முன்வரைவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்துள்ளதாக சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் சித்த மருத்துவத் துறையின் வைத்தியருமான சிறிகணநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கோண்டாவிலில் உள்ள யாழ்.மாவட்ட புடவை நெசாவளர் கூட்டுறவு சங்கத்தின் வளாகத்தில் ஒரு பகுதியை நீண்டகால குத்தகைக்கு பெற்றுத்தரும் பட்சத்தில் அதில் மூலிகை தோட்ட உற்பத்தி மற்றும் இயந்திர சாதன உதவியுடன் மருந்து உற்பத்தி, தோஸ்ஸி பன்டேச் உற்பத்தி ஆகியவற்றை மேற்கொள்ள முடியுமென கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வடமாகாண ஆளுனரின் உதவியுடன் மருந்துவகைகளை அசைப்பதற்கான இயந்திரசாதனங்களை பெற்றுத்தருவதாக வடமாகாண கைத்தொழில் திணைக்கள பணிப்பாளர் உறுதியளித்துள்ளார் என்றும்

வலிகாமம் வினான் கிராமத்தில் சித்த மருத்துவப் பற்பொடி தயாரிப்பிடம் அமைப்பதுடன் மூலிகைகளை பயிரிடுவதுடன் அறுவடை செய்யப்படும் மூலிகைகளை பதனிடுதலையும் செய்யவுள்ளனர். இத்துடன் உற்பத்தியாகும். மருந்துகளை வெளியே கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு வாகன மொன்று கொள்வனவு செய்து தருவதற்கு உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளை அரச அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட இத்துறை சார் பணிப்பாளர்களிடம் தமது சங்கம் வழங்கியுள்ளது என்றார். (2-22)

## கும்பாபிஷேகம்

(வேலணை)

சண்டிலிப்பாய் இரட்டைப்புலம் ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் 9.41 மணிவரை உள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வைரவர் சுவாமிக்கு எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (4-22)

## வாசிகசாலையை புனரமைத்துத் தரவும்

(வேலணை)

வேலணை கிழக்கில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலையமானது மிகவும் பழுதடைந்து காணப்படுவதுடன் யுத்தத்தினாலும் சேதமடைந்துள்ளது.

எனவே இச் சனசமூக நிலையத்தை புனரமைப்புச் செய்து தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

இதேபோன்று இச் சனசமூகநிலையம அமைந்துள்ள செல்வநாயகம் வீதியில் மின்சார விநியோகத்திற்கு நாட்டப்பட்டிருக்கும் மின்கம்பங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டு எந்த நேரத்திலும் முறிந்து விழும் நிலையிலேயே காணப்படுகின்றது.

எனவே இப்பகுதியில் முறிந்து விழும் நிலையிலுள்ள மின்கம்பங்களை மாற்றி தருமாறு மின்சார சபையினரிடமும் இவ்வீதி வாழ் மக்களும் சமூக ஆவலர்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-22)

## வெறிச்சோடிய யாழ்.குடாநாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக புதிய ஆடைகளை கொள்வனவு செய்வதற்காக பெருந்தொகையான மக்கள் யாழ்நகரப்பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தொகையாக காணப்பட்டனர்.

இம்முறை பெருந் தொகையான ஆடைகள் தென்னிலங்கையிலிருந்து எடுத்து வரப்பட்டது.

பல வியாபாரிகள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.மக்களும் திரளாக காணப்பட்டனர்.

ஆனால் நேற்றைய தினம் பகல்வேளை ஏறக்குறைய யாழ்குடாநாட்டின் அனேகமான கடைகளும் பூட்டப்பட்ட நிலையில் வீதிகளிலும் மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாக வெறிச்சோடிக் காணப்பட்டதை அவதானிக்க கூடியதாயிருந்தது. (2)




## புதிதாக அனுமதிக்கப்பட்ட சொந்த இடங்களுக்கு செல்பவர்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படாத பாதைகள் தற்போது திறக்கப்படுகின்றன. இவ்வாறு புதிதாக அனுமதிக்கப்பட்ட இடங்களில் இருக்கும் சொத்துக்களின் சொந்தக்காரர்கள் தமது நிரந்தர இடங்களுக்குச் செல்வதற்காக அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என இலங்கை இராணுவத்தினால் அறிவித்தல் தரப்பட்டுள்ளது.

அவ்வாறான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குப் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என சொத்துக்களின் உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

தமது சொத்துக்குரிய உரிமையினை நிரூபிப்பதற்கான சட்டபூர்வமான ஆவணங்களைச் சம்பந்தப்பட்ட பிரிவின் கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து அவரது சிபார்சுடன் சம்பந்தப்பட்ட பிரிவு பிரதேச செயலர் / உதவி அரசாங்க அதிபரின் மேலொப்பத்தைப் பெற்று நேரடியாக தத்தமது பிரிவு இராணுவ சிவில் நிர்வாகப் பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தற்போது யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக வதியாது வெளியிடங்களில் குடியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களும் தமது சொத்துக்களை மீளவும் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக மேற்கூறிய நடைமுறையைப் பின்பற்றுமாறு வேண்டப்படுகிறார்கள். (2)

## புங்குடுதீவு வைத்தியசாலையின் வைத்திய சேவையை மேம்படுத்தவும்

### மக்கள் கோரிக்கை

புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவு சிகிச்சை சேவை மட்டுமே நடைபெற்று வருகின்றது. உள் நோயாளர் சிகிச்சைப் பிரிவு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இவ் மருத்துவமனையானது மாவட்ட வைத்தியசாலையாக இயங்கிய போது வைத் திய அதிகாரி ஒருவரும் உதவி வைத்தியர்கள் இருவருமாக 3 பேர் கடமையாற்றினர். ஆனால் தற்போது இங்கு நிரந்தரமாக வைத்தியர் இல்லை.

ஆனால் ஒருவர் ஒப்பந்த அடிப்ப டையில் தான் பணிபுரிகின்றார் என்றும் இதேபோல் போதியளவு தாதியரோ அன்றி போதியளவு ஏனைய பணியாளர்களோ இல்லை.

எனவே இவ் மருத்துவமனையில் தேவையான பணியாளர்களையும் நியமித்து தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினரிடம்வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மேலும் பயணிகள் பேருந்து சேவையிலீடுபடும் அரச மற்றும் தனியார் பேருந்துகளை இவ் மருத்துவமனை மட்டும் சென்று திரும்பக் கூடிய மாதிரி போக்குவரத்தில் ஒழுங்குகளை செய்து தருமாறும் இதனால் சிகிச்சை பெற வரும் நோயாளர் நீண்டதூரத்துக்கு நடக்காமல் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்று செல்லமுடியுமென மக்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

தற்போது போக்குவரத்து புங்குடுதீவு சந்தையடி மட்டுமே நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (2-22)

## வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்திற்கு கட்டடம் அமைத்து கொடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஏற்கனவே முன்வைத்திருந்த கோரிக்கைகளுக்கு அமைவாக நேற்று முன்தினம் மேற்படி சங்கத்தின் பிரதிநிதிகளையும் , யாழ்.மாநகர சபையின் முதல்வர், பிரதி மேயர், ஆணையாளர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாகத்தரப்பினரையும் சந்தித்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

யாழ்.மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலின் போது மேற்படி தொழிலாளர் சங்கத்திற்கான அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கான நிதியை வழங்க தான் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்ததுடன், இக் கட்டடத்திற்கான காணி யாழ். மாநகர சபையினால் ஒதுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாநகர சபையில் நிலவும் தொழிலாளர்களுக்கான வெற்றிடங்களை உடன் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென இங்கு சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர் மாநகரசபைத் தொழிலாளர்கள் தங்கள் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதுடன், சிறந்த முறையில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித்தார்.

மேலும் மாநகரசபை எல்லைக்குள் உள்ள வளங்களை உரியமுறையில் பயன்படுத்தவேண்டும் எனவும் தேவைகள் ஏற்படும்போது வெளியிலிருந்து வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

மேற்படி தொழிலாளர்களுக்கான இலக்குடன் வசதிகளை விஸ்தரிப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்ததுடன் ஓய்வூதியம் தொடர்பிலான பிரச்சினைகள் உடன் தீர்க்கப்படும் என்றும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

## புத்தாண்டு விழாவும் சேமிப்பு நிகழ்ச்சி திட்டமும்

(யாழ்ப்பாணம்)

யாழ் சமுர்த்தி மகாசங்கம், யாழ் நகர் கிழக்கு வங்கிச் சங்கம், யாழ் நகர் மேற்கு வங்கிச் சங்கம், யாழ் பிரதேச செயலகம் ஆகியன இணைந்து நடத்தும் புத்தாண்டு விழாவும் சேமிப்பு நிகழ்ச்சித்திட்டமும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் மரியதாஸ் கியூமன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ் உதவி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், யாழ்ப்பாணம் கணக்காளர் வேலாயுதர் வேல்நிதி, யாழ் உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.கே. சிவசந்திரன், யாழ் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பவளராணி கனகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் சேமிப்பு மேம்பாட்டு வாரமாக ஏப்ரல் 14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை 4 நாட்கள் சேமிப்பை திரட்டுவதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த் சேமிப்பு வாரத்தினுள் பங்கு, சிசுரக்க, சிறுவர் குழுக் கணக்குகளில் ரூபா 1000 அல்லது அதற்கு மேல் வைப்பிடும் வைப்பாளர்களுக்கு சீட்டிழுப்பு நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் அன்றைய தினம் யாழ் நகர் கிழக்கு, மேற்கு வங்கிகளில் புத்தாண்டு விழா நடத்தப்படவுள்ளதுடன் போதைப்பொருள் மதுபாவனையிலிருந்து மீண்டவர்கள் புத்தாண்டு குமரனாக கௌரவிக்கும் நிகழ்வு, பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் என்பனவும் நடத்தப்படவுள்ளது . (6-4)

# இந்தியாவில் அணுசக்தி கூட்டுறவுக்கான உலக மையம் அமைக்கப்படும்

## இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

அணுசக்திக் கூட்டுறவுக்கான உலக மையம் இந்தியாவில் அமைக்கப்படும் என்று வோஷிங்டனில் நடைபெறும் உலக அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்துள்ளார்.

சர்வதேச அணுசக்தி அமைப்பு மற்றும் ஆர்வமுள்ள உலக நாடுகளின் பங்களிப்புடன் அமைக்கப்படும் இந்த அணுசக்தி மையத்தில், நவீன அணுசக்தி முறை ஆய்வுகள், அணுசக்தி பாதுகாப்பு, கதிரியக்க பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், வேளாண்மை மற்றும் உணவுத் துறைகளில் கதிரியக்கத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல் போன்ற ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்கள் மற்றும் தொழில் நுட்பங்கள்,தேசவிரோத சக்திகளின் கையில் சிக்கக்கூடிய அபாயம் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றும் இந்தியா அதுபற்றி மிகுந்த கவலை கொண்டிருக்கிறது என்றும் மன்மோகன் சுட்டிக்காட்டினார்.

அணுசக்தி பாதுகாப்பை உறுதிசெய்வது, நாடுகளின் கையில் உள்ளது. அது அந்த நாடுகள் எந்த அளவுக்குப் பொறுப்புடன் நடந்து கொள்கிறது என்பதைப் பொறுத்தே அமையும். இல்லாவிட்டால் அவை வெற்றுக் கோஷங்களாகவே அமையும் என்று அவர் குறிப்பிட்டார். (2-6)

# பாகிஸ்தான் படையினர் நடத்திய வான் தாக்குதலில் 73 பொதுமக்கள் பலி

பாகிஸ்தான் அரச படையினர் நடத்திய வான் தாக்குதலில் 73 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் பின் தங்கிய கிராமமொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற போதிலும், பின் தங்கிய பிரதேசம் என்பதனால் ஊடகங்களுக்கு பிந்தியே தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவிரவாத நிலைகளை இலக்குவைத்து இந்த ஜெட் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத்தாக்குதலில் அதிகளவு தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ள அதேவேளை, அதிகளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக உள்நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த 18 மாத காலமாகவே குறித்த பிரதேசத்தில் பல பொதுமக்கள் வான் தாக்குதல்களினால் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# எவரெஸ்ட் சிகரத்துக்கு அருகே புதிய விமான நிலையம்

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்காக குவியும் வெளிநாட்டு பயணிகள் எல்லோருக்கும் நேபாளம் தான் வாசலாக இருக்கிறது. அதை மாற்றவேண்டும் என்றும் அவர்களை சீனாவின் பக்கம் இருந்து மலை ஏறச் செய்ய வேண்டும் என்றும் சீனா விரும்புகிறது. இதற்காக அது எவரெஸ்ட் சிகரம் அருகே புதிய விமான நிலையத்தை கட்டுகிறது. அதற்கு அமைதி விமான நிலையம் என்று பெயர் சூட்டியுள்ளது.

இந்த விமான நிலையம் திபெத் பகுதியில் ரூ.12 கோடிசெலவில் கட்டப்படவுள்ளது. சீனா-நேபாள நெடுஞ்சாலையில் அமைய இருக்கிறது. திபெத்தில் கட்டப்படும் 5ஆவது பயணிகள் விமான நிலையம் இதுஆகும்.

இந்த விமான நிலையம் அமைந்தால் வெளிநாட்டு பயணிகள் வருகை அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. விமான நிலையத்தின் கட்டுமானப்பணி, இந்த மாதம் தொடங்குகிறது. வருகிற அக்டோபர் மாதம் பணி முடிகிறது. இவ் விமானநிலையத்திற்கு 2 இலட்சத்து 30 ஆயிரம் பயணிகள் வந்துசெல்லமுடியும். (2-6)

# எலெக்ரிக் கார்களின் மூலம் மின்சாரம்; அமெரிக்க வல்லுநர்கள் கண்டுபிடிப்பு

(அமெரிக்கா)

எலக்ரிக் கார்கள் போக்குவரத்துக்கு மட்டுமன்றி மின் தொகுப்புக்குத் தேவையான மின்சாரத்தையும் கொடுக்க வல்லவை என்பதை, அமெரிக்க வல்லுநர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

அமெரிக்காவில், டெலவேர் பல்கலைக் கழகப் பேராசிரியர் வில்லெட்கெம்ப்டன் என்பவர், இந்த முறையை செயல்படுத்த வெகிக்கிள் டு கிரிட் என்ற தொழில்நுட்பத்தை 1997 இல் கண்டுபிடித்தார்.

வருங்காலத்தில் சூரிய ஒளி மற்றும் காற்றிலிருந்து தயாரிக்கப்படும் மின்சக்தி தான் உலகின் மாற்று மற்றும் புதுப்பிக்க வல்ல எரிசக்தியாக இருக்கும். அப்போது இவ்வகைக் கார்கள் பெருமளவில் உதவும் என்கிறார் கெம்ப்டன்.

இவர், எலக்ட்ரிக் கார் பற்றரியிலிருந்து 10 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கமுடியும் என கூறுகிறார். தற்போது, டொயோட்டா சியான் மாடல் காசுகளை இதுபோன்று மாற்றியுள்ளார்.

டெலவேர் பல்கலையில் மூன்று கார்களும், டெலவேர் மாநில அரசுத் துறையில், நான்கு கார்களும் இந்த முறையில் இயங்குகின்றன. காரின் முன்பகுதி வழியே மின் தொகுப்பில் இணைப்புத்தரப்படும். இதன் மூலம் மின்சாரத்தைப் பெறவோ, வழங்கவோ இயலும். நெடுஞ்சாலைகளில் இது போன்ற சார்ஜர் நிலைய ங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

நம்பயன்பாட்டைத் தவிர்த்து, மிச்சமுள்ள மின்சாரத்தை, அந்த மின்தொகுப்பில் கொடுத்துவிட்டு, அதற்குரிய பணத்தையும் பெற்றுக்கொள்ளலாம். மின்மாற்று இணையம் மூலம் கட்டுப்படுத்தப்படும். தற்போது இந்த 'வி2ஜி' தொழில்நுட்பம் பொருத்தப் பட்ட ஒரு காரின் விலை 36 இலட்சம் வரை விற்கப்படுகிறது. ஆனால், இவ்வகைக் கார்கள் அதிகளவில் உற்பத்தியானால் ஒரு காரின் விலை ஒரு இலட்சத்து 40 ஆயிரம் வரை குறையும் என்கிறார் கெம்டன். (2-6)

# அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் அச்சநிலை தொடர்கின்றது

## த.தே.கூ.நாடாளுமன்ற உறுப்பினர் பியசேன தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்துவிட்டாலும் அம்பாறை மாவட்டத்தின் தமிழ்ப் பகுதிகளில் இன்னமும் அச்சநிலை நிலவுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஆலையடிவேம்பு மற்றும் திருக்கோவில் உட்பட தமிழர்கள் வாழும் சில பகுதிகளில் அச்ச சூழல் நிலவுவாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் புதிதாக நாடாளுமன்றத்துக் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பொடியப்பு பியசேன பிபிஸிக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆளும் கட்சியின் ஆதரவாளர்களால் தான் உட்பட பலர் அங்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் நள்ளிரவு நேரங்களில் வீடுகள் தாக்கப்படுகின்றன எனவும் இதன் காரணமாக மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகவும் தெரிவிக்கிறார்.

தனக்கே பாதுகாப்பு இல்லாத சூழலில் உதவி தேடி வரும் மக்களுக்கு தன்னால் உதவமுடியாத நிலையில் இருப்பதாகவும் பியசேன கூறுகிறார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினருக்கே பாதுகாப்பு இல்லாத நிலையில் தங்களது பாதுகாப்புக் குறித்து அங்குள்ள மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள் என்றும் பொலிஸாரின் பாதுகாப்பில்லாமல் தன்னால் வீட்டில் கூட இருக்க முடியாத ஒரு இறுக்கமான சூழல் உள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால் இதில் உண்மை ஏதும் இல்லை என்றும் அம்பாறை பகுதி முழுவதிலும் அமைதி நிலவி வருகிறது என்றும் இலங்கையின் பொலிஸ் பேச்சாளர் பிரஷாந்த் ஜெயக்கொடி கூறுகிறார்.

அம்பாறையில் அச்சசூழல் நிலவுகிறது என்று கூறப்படும் தகவல் முற்றிலும் பொய்யானது என்றும் தேர்தலுக்கு பிறகு அப் பகுதியிலிருந்து தமக்கு ஒரு முறைப்பாடு கூட வரவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (2-6)

# சீனாவில் நில நடுக்கம் 300க்கு மேற்பட்டோர் பலி

சீனாவின் வடமேற்கு மாகாணமான கியுங்காய் பகுதியில் நேற்று ஏற்பட்ட கடும் நில நடுக்கத்தில் சுமார் 300 க்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். 8ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

சீன நேரப்படி நேற்று காலை 7.49 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.1 ஆகப் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு நில நடுக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பூமிக்கு அடியில் 33 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து 3முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

நிலநடுக்கத்தால் பல வீடுகள் இடிந்துள்ளதாகவும், பலிஎண்ணிக்கை மேலும்உயரக்கூடும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (2-6)

# கண்டி மாவட்ட தேர்தல் முடிவுகளை அறிவிக்க முடியாமை வருத்தத்தக்கது

## கெஹலிய ரம்புக்வெல்ல



கண்டி மாவட்ட தேர்தல் முடிவுகளை அறி விக்க முடியாமை வருந்தக்கதென அரசாங்கத்தின் பாதுகாப்பு பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறானநிலை ஏற்படாதென தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள மீள் தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது.

சில பேராசை பிடித்த ஒழுக்கமற்ற அரசியல் தலைவர்களினால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் அவப் பெயர் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவர்கள் கட்சியின் நன்மதிப்பை பேணும் வகையில் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

சித்த சுயாதீனமற்ற பேரசைப் பிடித்தவர்களுடன் செயற்படும் போது அவர்களுடைய மனநிலைக்கு நாமும் இறங்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது

எவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டாலும் கண்டி மாவட்ட மக்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கு தலைமைதாங்க தாம் தயார் என கெஹலிய ரம்புக்வெல்ல மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்களுக்கு எமது இனிய விகிர்தி புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கின்றோம். சென்ற விரோதி வருட புத்தாண்டுத் தினத்தில் ஸ்ரீ அம்மா பகவான் விபூதி, சந்தனம், குங்குமம், அத்தர், நெய் போன்ற அபிஷேகப் பொருட்களை அருளி நாட்டில் அமைதி, சந்தோசம் அடையச் செய்து அகில இலங்கை வாழ் மக்களையும் பரஸ்பரம் ஒற்றுமையாக நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று வரக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளமை ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்கிரஹமேயாகும். தொடர்ந்தும் ஸ்ரீ அம்மா பகவான் வாழ்க்கையில் விரக்தி நிலைமையடைந்து துன்பம் துயரப்படும் மக்கள் அனைவரையும் அவர்களின் வேண்டுதல்களை நிறைவு செய்து அருட் சக்தியினை வழங்கி ஆனந்தமடையச் செய்து வருவதால் பக்தர்கள் அனைவரும் இப்புத்தாண்டு தினத்தில் ஸ்ரீ அம்மா பகவான் மீது நம்பிக்கை வைத்து வருகை தந்து அருட் சக்தியினை அற்புதமாகப் பெற்று மகிழ்ச்சியுடன் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி
சுழிபுரம்
ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப்
பிரார்த்தனை மையம், யாழ்.மாவட்டம், இலங்கை
0777651719

(C-054)

# அரசுக்கு எதிராக வழக்குத் தொடர நடிகை கீதா குமாரசிங்க தீர்மானம்

பிரபல நடிகை கீதா குமாரசிங்க தான் போட்டியிட்ட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளார்.

பிரிட்டிஷ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் சிங்கள மொழியிலான சங்தேஷய செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் வாக்குகள் எண்ணப்படும் பொழுது தான் முன்னணியில் இருந்ததாகவும் ,

தன்னுடைய கட்சியின் தலைவர்களாலேயே தனக்கு எதிராக அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகவும் உள்ளதாகவும் அவர்களது பெயர்களை வெளியிட முடியாத நிலையில் உள்ளதாகவும் காலி மாவட்டத்தில் ஆளும் கட்சியின் சார்பில் கீதா குமாரசிங்ஹ போட்டியிட்டிருந்தார். இம்மாவட்டத்தில் சர்ச்சைக்குரிய முன் னாள் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த முத்து ஹெட்டிகம், அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## வீதியைத் திருத்தி தரவும்

வேலணை 3ஆம் வட்டாரத்திலுள்ள தவிடு தின்னிப்பிள்ளையார் கோவில் வீதியை வடக்கின் வசந்தத்தின் மூலம் திருத்தம் செய்து தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இவ்வீதியானது 40 வருடங்களுக்கு மேலாக எவ்வித திருத்தங்களும் மேற் கொள்ளாமல் குன்றும் கற்குவியலுமாகவே காட்சிதருகின்றது. பாடசாலை மாணவர் மற்றும் நோயாளர்கள் என பலரும் இவ்வீதியால் செல்லும் போது மிகவும் சிரமப்படுகின்றனர் என தெரிவிக்கின்றனர். (2-22)

# போக்குவரத்து சட்டங்களை மீறுதல் இலங்கையில் அதிகரித்துள்ளது

## மோட்டார் போ.வ.ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மோட்டார் போக்குவரத்துச் சட்டங்களை மீறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.மோட்டார் போக்குவரத்து சட்டங்கள் குறித்து போதிய தெளிவின்மை மற்றும் சட்டங்கள் தொடர்பான உதாசீனப் போக்கு ஆகியவையே அதிகளவு குற்றங்கள் இடம்பெறக்காரணம் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் பி.விஜேரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கும் போது, அண்மைய ஆண்டுகளில் பல பாதைகள் புனரமைக்கப்பட்டுள்ளது. இதனால் பாதைகளில் செல்லக் கூடிய வேகக் கட்டுப்பாடுகளும் அதிகரித்துள்ளது.

எனினும் இந்த வேகக் கட்டுப்பாடு தளர்வினை அநேக சாரதிகள் துஷ்பிரயோகம் செய்கின்றனர். வாகனங்களை மிக வேகமாக செலுத்துவதனால் நாளாந்தம் விபத்து சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு நாள் தோறும் இடம்பெறும் விபத்துக்களின் மூலம் சராசரியாக 6 பேர் வரையில் உயிரிழக்கின்றனர். இதற்கு மேலதிகமாக அதிகளவானோர் காயமடைகின்றனர்.

மேலும் இதற்கமைய வீதி போக்குவரத்து விதிகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய ஓர் கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# தேர்தல் ஆணையாளரின் தீர்மானங்களுக்கு அடிபணிந்து செயற்பட வேண்டும்

## கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்சி உறுப்பினர்கள் அடி பணிந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பாக நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் மீள் தேர்தல் நடாத்துவது குறித்த உத்தரவுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த பிரதேசங்களில் வாக்கெடுப்பு இரத்து செய்யப்பட்டமை வருத்தமளிப்பதாகவும் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள மீள் தேர்தல்களுக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# வடக்கு - கிழக்கு பொருளாதார அபிவிருத்தி

**ம.ஜனநாயகம்**
**பொறியியல் ஆலோசகர்**

வடக்குக் கிழக்குப்பற்றி நிறையப் பேசப்படும். இந்த நேரத்தில் இப்பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றிய சில அடிப்படை விடயங்களை இங்கு ஆராயலாம். தொழில் வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றிற்கு இன்றியமையாதவை அடிப்படைக் கட்டுமானங்கள். சாதாரண சூழ்நிலையில் தொழில் வளர்ச்சியோடு சேர்ந்து இவ்வளர்ச்சியினால் தூண்டப்பட்டு கட்டுமானங்கள் உருவாகுவது இயற்கையானது. அவ்விதம் உருவாகும் கட்டுமானங்கள் மேலும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க இவை இரண்டும் சேர்ந்து வளர்வது இயல்பான வளர்ச்சி.

மூன்று தசாப்தங்கள் தேக்கமுற்ற நிலையிலும் இருந்த சில கட்டுமானங்களை இழந்த நிலையிலும் இவை துரித கதியில் மீளமைக்கப்பட வேண்டியது மிக அவசியம். அடுத்து வரும் பாராளுமன்றம் ஆவன செய்யும் என நம்புவோமாக.

### ஒரு புதிய தொழில் வெற்றி பெற அவசியமானவை

- உற்பத்தியாகும் பொருளுக்கான சந்தை வாய்ப்பும் சந்தைப்படுத்தும் திறனும்
- உற்பத்தி தொழில்நுட்பமும் இயந்திர சாதனங்களும்
- மனிதவளம் மற்றும் மூலப்பொருள் வளங்கள்
- தொழிலுக்குத் தேவையான நிதி
- இறுதியானதும் மிக முக்கியமானதும் மேற்படி நான்கையும் சேர்த்து ஒரு தொழிலை இலாபகரமாக நடத்தவல்ல தொழில் துணிவோர்.

### சந்தை வாய்ப்பு

1. குடிபெயர்ந்த காரணத்தால் சிதைவுற்ற பல சிறு தொழில்கள் மீளக்குடியமரும் இந் நேரத்தில் திரும்பவும் சீர் செய்யப்பட வேண்டும். சமுதாயத்தின் பால், இறைச்சி, முட்டை போன்ற தேவைகள் தன் நிறைவு பெற்றுப் பிற பிரதேசங்களுக்கும் அனுப்பும் வகையில் வளர முடியும்.

2. வடக்கு, கிழக்கைச் சேர்ந்த புலம் பெயர்ந்தவர்கள் இன்று உலகெங்கும் வாழுவது எமக்கு மிகப்பெரிய பலம். அவர்களுக்குத் தேவையான பொருட்களும் சேவைகளும் மிகப் பெரிய சந்தைவாய்ப்பாகும். அவர்களுடைய தேவைகளை உரிய வகையில் வழங்கத்தக்கதாக நாம் எம்மைத் தயார்ப்படுத்தினால் இந்தச் சந்தையைச் சரியாக நாம் கைப்பற்றினால் அவர்களுக்கும் எமக்கும் சம காலத்தில் இலாபம் வரும் வகையில் ஒழுங்கு செய்து கொண்டால் இந்த வணிகப் பிணைப்பும் எமது தேசியப் பிணைப்பும் ஒன்றுக் கொன்று வலுவூட்டுவனவாக அமையும். இந்தத் தொடர்பு இலாபகரமான தொழில், பொருளாதார அபிவிருத்தி என்ற எல்லைகளை மீறி ஒரு பலமான சமுதாயம் உருவாக வழி சமைக்கும்.

அடுத்துவரும் தசாப்தங்களில் ஆயுத பலம், அரசியல் பலம் இவற்றை மீறி பொருளாதார பலம் முன்னிலை வகுக்கும் போது உலகெலாம் பரவி பொருளாதார பலமும் பெற்ற இனம் உலக அங்கீகாரத்தைப் பெற முடியும். அதேநேரம் இலங்கையிலும் ஒரு அங்கீகாரமும் வேற்றுமைகள் களைந்த நிலையும் உருவாகும்.

3. அபிவிருத்தியடைந்து வரும் இந்நாட்டின் ஏனைய மாகாணங்களின் தேவைகளும் நல்லதோர் சந்தைவாய்ப்பே. தேவைகளைச் சரியாக அறிந்து தரமான பொருட்கள், சரியான விலையில் வழங்கப்பட்டால் தொழில் இனபேதத்தை மீறி வளரும். அவ்வாறான வளர்ச்சியே நாளடைவில் நல்ல ஒரு சமூக அமைப்பிற்கு வழிகோலும். தொழில் வளர்ச்சி இன்மையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தந்த கசப்புணர்வுகள் இனப் பிரச்சினை வளர ஏதுவாக இருந்ததைப் பார்த்திருக்கிறோம். மாறாக இவ்வளர்ச்சி மூலம் இனங்களிடையே இணக்கத்தையும் நேசத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும்.

4. வளர்ந்து வரும் இந்தியாவின் தேவைகள் பெருகுகின்றன. உலக வாகன உற்பத்தியில் கணிசமான பகுதி தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் நிலை உருவாகுகிறது. மேலும் பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ் நாட்டில் ஆலைகள் அமைக்கிறார்கள். Nokia நிறுவனம் நாளொன்றிற்கு பத்து இலட்சம் கைத்தொலைபேசிகளை உற்பத்தி செய்கிறது. இதேபோல் வேறும் பல நிறுவனங்கள் தமது உலகளாவிய தேவைகளை இந்தியாவிலே செய்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான உபபொருட்கள் பல நாடுகளிலிருந்தும் பிற மாநிலங்களில் இருந்தும் தருவிக்கப்படுகின்றன. இந்தியாவின் பல மாநிலங்களை விட நாங்கள் தமிழ் நாட்டிற்கு அண்மையாக இருப்பதும் மொழிவாரியாக எமக்குள்ள உறவும் எமக்குச் சாதகமான அம்சங்கள். இந்தச்சந்தை மிகமிகப் பெரிய பெறுமதியுள்ள சந்தை. போட்டிகள் கடுமையாக உள்ள சந்தை. ஆனால் எம்மால் வெற்றி கொள்ளக்கூடிய சந்தை.

காலப்போக்கில் பலாலி விமான நிலையமும் காங்கேசன்துறை துறைமுகமும் இயல்பு நிலைக்கு வரும்போது இந்தச் சந்தையும் அதன் நன்மையும் பன்மடங்காகும்.

5. உலகமயமாக்கப்பட்ட பின் உலகம் ஒரு கிராமம் என்ற உணர்வு வரும்போது உயர் தொழில்நுட்பங்களை கையாண்டு தரமான பொருட்கள் செய்தால் உலகச் சந்தையில் நுழைவதும் சாத்தியமே. சந்தையை அறிதலும் சந்தைப்படுத்தும் முறையைத் தெரிவதும் முக்கியம். இவ்விடயத்தில் புலம் பெயர்ந்த எம்மவரின் துணை பெரிதும் உதவும்.

### உற்பத்தித் தொழில் நுட்பங்களும் இயந்திரங்களும்

இன்றைய கணனி யுகத்தில் தொழில் நுட்பங்கள் எல்லாம் தாராளமாக பகிரப்படுகின்றன. இயந்திரங்களைத் தேர்ந்தெடுக்கும் போதே வழங்குனர்களிடமிருந்தும் தொழில் நுட்பத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல்கலைக்கழகங்கள், ஆய்வுகூடங்கள் கூட இதற்குத் துணை போகும். வடக்கு, கிழக்கு அபிவிருத்தியைப் பொறுத்தவரை எமது தேவைகள் அனைத்தையும் இந்தியாவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

### மனிதவளமும் மூலப்பொருள் வளங்களும்

மனிதவளம் தொழிற் தேவைக்கேற்றாற் போல் பயிற்றப்பட வேண்டும். இப்பயிற்சிகள் உள்ளூர் நிறுவனங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகம் ஆகியவற்றால் நடத்தப்பட முடியும். இந்தியாவில் எல்லாவிதமான பயிற்சிகளும் உண்டு. மூலப் பொருட்களைப் பொறுத்தவரை எம்மிடம் இல்லாதவற்றை இருக்குமிடத்திலிருந்து தருவித்துக்கொள்ள முடியும். இங்கும் அனைத்தும் இந்தியாவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

### தொழிலுக்குத் தேவையான நிதி

சிறந்த முறையில் தயாரிக்கப்படும் திட்ட அறிக்கை (Project Report) வங்கிகளிலிருந்து தேவையான நிதியைப் பெற்றுக் கொடுக்கும். வெவ்வேறு வகையான வங்கிகள் வெவ்வேறு கடன்களைத் தருவதால் நமது தொழிலுக்குரிய வங்கியைத் தேர்ந்து அவர்களின் நிபந்தனைகளை நிறைவேற்றி கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

பலகோடி மதிப்புள்ள பெரிய திட்டங்களைப் பொறுத்தவரை நிதி நிறுவனங்கள் நல்ல திட்டங்களைத் தேடி முதலீடு செய்யக் காத்திருக்கிறார்கள் என்பது யதார்த்தம்.

### தொழில் துணிவோர்

நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலும் பின்னரும் நம் சமுதாயத்தில் தொழில் துணிவோருக்கு எவ்வித தூண்டுதலோ உற்சாகப் படுத்துதலோ இருக்கவில்லை. திறமையுள்ளவர்கள் அரச நிறுவனங்களில் தம்மை இணைத்துக் கொண்டு முன்னேறுவதிலேயே பெரும் முனைப்புக் காட்டுகிறார்கள். விகிதாசாரத்தை விட பல மடங்கு அதிகமாக வடக்குக், கிழக்கைச் சேர்ந்தவர்கள் கல்வித் துறையிலும் , அரச சேவையிலும் இருந்ததும் இந்நாட்டுப் பிரச்சினைக்கு ஒரு காரணமாக இருந்தது. பிரதேசம் தொழில் வளர்ச்சி பெற இந்நிலை மாற வேண்டும். திறமையுள்ளவர்கள் தம் முதற் தெரிவாக தொழில் துணிதலை எடுக்க வேண்டும். இம்மனமாற்றம் நிகழ இக்கால கட்டம் சாதகமாக இருக்கிறது.

வெளிநாட்டில் இருக்கும் இளைஞர்கள் கூட தொழில் துணிபவர்களாக தத்தம் நாட்டிலோ ,வடக்குக் கிழக்கிலோ தொழில் தொடங்கலாம். தொழில் துணிபவர்களுக்குச் சமுதாயம் சரியான அங்கீகாரம் அளித்தால் இம் மனமாற்றம் இலகுவில் நிகழும்.

இன்று எம்மத்தியில் உள்ள இளைஞர்கள் கூடப் பின் நாளில் தொழில் துணியும் தூர இலக்கோடு வெளிநாடு சென்று வந்து தொழில் துணியலாம். சட்டப்படி வெளிநாடு செல்ல ஒவ்வொரு நாடும் சட்டதிட்டங்கள் வைத்திருக்கிறார்கள். உதாரணமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல அடிப்படை ஆங்கில அறிவும் அந்நாட்டில் அவ்வப்போது அவசியம் என்று கருதப்படும் தொழில்களில் ஒன்றில் அனுபவமும் தேவை.

இரண்டுமே ஆறு மாதங்களில் பெற்றுக் கொள்ள முடியும். வெளிநாடு போகும்போதே ஒரு தொழில் துணிபவராக திரும்பும் திடசங்கற்பம் இருந்தால் தொழில் அனுபவம், தொழிற் தொடர்புகள் இவற்றோடு வந்து தொழிலைத் தேர்வு செய்யலாம்.

தொழில் துணிவதற்குத் துணிவு மட்டும் போதாது. பயிற்சியும் பெற வேண்டும். இங்கு CEFE Center for Excellence போன்ற நிறுவனங்கள் இத்தகைய பயிற்சிகளை அளிக்கிறார்கள்.

இப்பயிற்சிகள் பற்றிய விபரமும் இக் கால கட்டத்தில் தொடங்கக்கூடிய தொழில்கள் பற்றிய விபரங்களும் அடுத்த பகுதியில்.

(தொடரும்)

3. நுண்ணாங்கிகளின் பருமனை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் இரண்டு அலகுகளை குறிப்பிடுக.

(B)1. நுண்ணாங்கியியலில் வளர்ப்பு ஊடகம் என கருதப்படுவதன் கருத்து யாது?

2. சரியான உதாரணத்துடன் இரண்டு வளர்ப்பு ஊடக வகைகளைக் குறிப்பிடுக?
1........
2........

3. பின்வரும் உபகரணங்களுக்கான பொருத்தமான கிருமியழித்தல் முறைகளைத் தருக? (வெப்பநிலை, அமுக்கம், நேரம் என்பன முக்கியமானவை)

1. வளர்ப்பு ஊடகம்........
2. பெற்றிக்கிண்ணம்........
3. விற்றமின்கள்........
4. கிருமி புகுத்துதல் என்பதன் கருத்து யாது?

5. வீரியம்/உக்கிரம் என்பதன் கருத்து யாது?

(C) 1. Interferon என்பது யாது?


2. இது (I) எவ்வாறு உடலைப் பாதுகாக்கின்றது?

3. பெற்ற நிர்ப்பீடனம் என்பதன் கருத்து யாது?

4. இயற்கையான முறையிலுள்ள குறிப்பிலக்கான நிர்ப்பீடன வகைகள் இரண்டு தருக?

5. மேற்கூறிய இரண்டு நிர்ப்பீடனங்களையும் வேறுபடுத்துக?

(D) இவ்வுரு வைரசின் கட்டமைப்பைக் காட்டுகிறது.
1.X,Y இன் பெயர்களையும் அவற்றிலுள்ள இரசாயனக் கூறுகளையும் எழுதுக?




X........ Y........

2. புரோகரியோட்டாக்களிலிருந்து வைரசுக்ள் வேறுபடுகின்ற மூன்று வழிகள் எவை?
1........
2........
3........

3. வைரசுக்கள் நிச்சயமாக கட்டுப்பட்ட கலத்தக ஒட்டுண்ணிகளாக இருக்க வேண்டியது ஏன் என விளக்குக?

4.பின்வரும் வைரசுக்களில் காணப்படும் நியூக்கிளிக் அமிலவகைகளைப் பெயரிடுக?
1. HIV........
2.TMV........
3. Herpes Simplex virus........

5.(a) நுண்ணுயிர்கொல்லி என்பவை யாவை?

(b) பொதுவாகப் பயன்படுத்தப்படும் நுண்ணுயிர்கொல்லிகள் மூன்றினைக் குறிப்பிடுக?


2. (A) தாவரங்களில் நீரின் மந்தமான அசைவு என்பதால் யாது விளங்கிக் கொள்கின்றீர்?
1........
2........

2. தாவரவேரின் குறுக்கே நீரின் ஆரைக்குரிய அசைவு மூன்று பாதைகளில் நடைபெறுகிறது. அவற்றைப் பெயரிட்டு சுருக்கமாக விளக்குக?
1........
2........
3........

3. நியம குறியீடுகளைப் பயன்படுத்தி நீர் அழுத்த சமன்பாட்டைத் தருக?

4. அதிபிரசாரணக் கரைசல் ஒன்றினுள் வீக்கமடைந்த தாவரக்கலம் ஒன்றை இடும் போது நீரழுத்த சமன்பாட்டின் கூறுகள் எவ்வாறு மாற்றமடைகின்ற என விளக்குக.

B) தாவரத் தண்டின் ஒரு பகுதியின் முப்பரிமாணத்தோற்றம் கீழே தரப்பட்டுள்ளது.




1. A,B,C, பகுதிகளைப் பெயரிடுக.
A........ B........ C........

2. A இன் பிரதான தொழிலைத் தருக.

3. A இத் தொழிலைச் செய்வதற்காக அதில் காணப்படும் மூன்று கட்டமைப்பு இயல்புகளைத் தருக.
1........
2........
3........

4. A கொண்டுள்ள வேறு கலங்களைப் பெயரிட்டு அவற்றின் தொழில்களைத் தருக?

| கலவகை | தொழில் |
|---|---|
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |

5. தாவரத்தில் காணப்படும் தாங்கும் இழையங்களைப் பெயரிடுக.

C) 1.B யின் தொழிற்பாடு யா?

2. C யானது மேற்கூறிய (i) தொழிலில் எவ்வாறு தொடர்புபட்டுள்ளது?

3) நீர் தவிர்ந்த உரியத்தினூடு கடத்தப்படும் மூன்று பதார்த்தங்களைப் பெயரிடுக.

4) பின்வருவனவற்றுக்கு உரிய தாவரளர்ச்சிப் பதார்த்தங்களைக் குறிப்பிடுக.
1. வித்து உறங்கு நிலையைக் குலைத்தல்........
2.பழம் கனிதலைத் தூண்டுதல்........
3.பூத்தலைத் தூண்டல்........
4.உச்சி ஆட்சி........
5.வித்துமுளைத்தலைத் தாமதித்தல்........

D) 1.அத்தியாவசியமான மூலகம் என்பதால் கருதப்படுவது யாது?

2. ஐந்து அத்தியாவசிய மூலகங்களைத் தந்து அவை உறிஞ்சப்படும் வடிவத்தையும் தருக.

| மூலகம் | வடிவம் |
|---|---|
| ........ | ........ |
| ........ | ........ |
| ........ | ........ |

# உயிரியல் :- பகுதி III

விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

01) 1. DNA இன் கட்டமைப்பை விபரிக்குக.
2. தாவரக்கலத்தின் இழையுருப்பிரிவை விபரிக்க

02) 1.புறச் சூழற்காரணிகளின் மாற்றம் எவ்வாறு ஆவியுயிர்ப்பு வீதத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது என விவரிக்குக.
2.ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவிட மேற்கொள்ளப்படும் பரிசோதனை ஒன்றை விபரிக்க.

03) 1.ஓர் சீர்திடநிலையில் எதிர்பின்னூட்டலின் பங்கை பொருத்தமான உதாரணத்தைப் பயன்படுத்தி பாய்ச்சற்கோட்டுப் படத்துடன் விளக்குக.
2. மனிதப் பெண்ணில் FSH சுரத்தல் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றது என விளக்குக.
3.மனித சூலகத்தின் கட்டமைப்பை விளக்குக.

04) 1.நுண்ணாங்கிகள் தொடர்பாக நோய், நோய்க்காரணி என்னும் பதங்களை விளக்குக.
2.மனித உடலில் நுண்ணாங்கிக்கு தொற்றுக்கு எதிராக இயங்கும் தனித்துவமற்ற பாதுகாப்பு பொறிமுறைகளைத் தருக.

05) பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
1. ஈரலின்தொழில்கள்
2. $C_3$ ஒளித்தொகுப்பின் ஒளித்தாக்கம்
3. தாவரங்களில் காணப்படும் ஒளித்தொகுப்பு முறை அல்லாத போசணை

# றோயல் கல்லூரி, கொழும்பு -07

## கல்வி பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை -2010

## வழிகாட்டல் பரீட்சை

**உயிரியல் -II** *Biology-II*

*2 மணித்தியாலங்கள்* *2 Hours*

01.) (A) மாப்பொருளும் செலுலோசும் உயர் மூலக்கூற்று நிறைகொண்ட பொலிசக் கரைட்டுக் களாகும்.

1. எவ் எக்சோசு வெல்லம் இவற்றை ஆக்கும். அடிப்படை அலகாக அமையும்?

..................................................

2. இரு எக்சோசு வெல்லங்கள் இணைந்து இருசக்கரைட்டு உருவாக்கப்படும் தாக்கத்தைப் பெயரிடுக?

..................................................

3.உயிரியல் ரீதியாக முக்கியத்துவம் பெற்ற மூன்று இரு சக்கரைட்டுகளைப் பெயரிட்டு அவை எங்கு காணப்படும் என்பதையும் தருக?

..................................................

4. மாப்பொருளுக்கும் செலுலோசுக்குமிடையிலுள்ள பிரதான கட்டமைப்பு வேறுபாடு என்ன?

..................................................

5. தாவரக்கலங்களின் எப் பிரத்தியேக கட்டமைப்பில் மாப்பொருள் காணப்படும்.

..................................................

(B) 1. கலமென்சவ்வினூடாக கடத்தல் நடைபெறும் நான்கு முறைகளைத் தருக?

1. .............................. 2. ..............................
3. .............................. 4. ..............................

2. கலமென்சவ்வில் காணப்படும் பிரதான உயிரியல் மூலக்கூறுகளைப் பெயரிடுக?

..................................................

3. கலமென்சவ்வின் நான்கு பிரதான தொழில்களைத் தருக?

..................................................

4. உயிருள்ள கலத்தின் கலக்கவசம் என்பது எதனைக் குறிக்கும்?

..................................................

5. விலங்குக் கலத்தில் கலக்கவசம் எவ்வாறு தோன்றுகின்றது என விளக்குக?

..................................................

(C) 1. தொகுப்பிழையம் என்றால் என்ன?

..................................................

2. என்பு ஒரு தொடுப்பிழையமாகக் கருதப்படுவதற்கு காரணம் என்ன?

..................................................

3. என்பு இழையத்தில் தொழிற்படும்இரு ஓமோன்களைத் தருக?

1.............................. 2..............................

4. என்பு மச்சை என்றால் என்ன?

..................................................

5. என்பு மச்சையின் பிரதான தொழிலைத் தருக?

..................................................

(D) 1. நாசிக்குழியில் காணப்படும் மேலணியைப் பெயரிடுக?

..................................................

2. சுவாசம் தொடர்பாக மனித மூக்கின் இரு தொழில்கள் தருக?

..................................................

3. காற்றுப்பைகளிலிருந்து காற்று வெளியேறுவதை தடுக்கும் வகையில் சிற்றறைச் சுரப்புக்களில் காணப்படும் இரசாயனப் பதார்த்தத்தைப் பெயரிடுக?

..................................................

4. பின்வரும் கலங்களிலும் இழையங்களிலும் நடைபெறும் கலப்பிரிவு வகைகளைப் பெயரிடுக?

(a) இரப்பை மேலணி..............................
(b) சுக்கிலச் சிறுகுழாயிலுள்ள மூலவுயிர் மேலணி..............................
(c) முதல் முட்டைக்குழியம்..............................
(d) கருப்பை அகவணி..............................

5. இழையுருப்பிரிவின் இரு முக்கியத்துவங்களைத் தருக?

1 ..............................
2..............................

03) (A) 1. மனித உணவுக்கால்வாய்த் தொகுதியின் பகுதிகளை ஒழுங்கு முறையில் தருக?

..................................................

2. உமிழ் நீர்ச் சுரப்பிகளைப் பெயரிட்டு அவற்றின் அமைவிடங்களையும் தருக?

| உமிழ்நீர்ச்சுரப்பியின் பெயர் | அமைவிடம் |
|---|---|
| .............................. | .................... |
| .............................. | .................... |
| .............................. | .................... |

3. உமிழ் நீரில் காணப்படும் இரு நொதியங்களைப் பெயரிட்டு அவற்றின் தொழில்களையும் தருக?

I)..................................................
II)..................................................

4. நாக்கிலுள்ள மேலணி வகையைத் தருக?


..................................................
..................................................

5. பின்வரும் விலங்கு வகுப்புகளின் உணவுக்கால்வாய் கொண்டிருக்கும் பிரத்தியேக இயல்பு ஒன்றைத் தருக?

1) (Turbellaria)..............................
2) (Gastropoda)..............................
3) (Ophiuroidea)..............................

(B) 1. அடிப்படை அமைப்பிலுள்ள நாடிவிற்களில் Verterarta களில் காணப்படும் நாடிவிற்கள் எவை?

..................................................




2) (A) யிலிருந்து (D) வரையான பகுதிகளைப் பெயரிடுக?

A.............................. B..............................
C.............................. D..............................

3. படத்தில் காட்டப்பட்டுள்ள பகுதி (A) யின் தொழில் யாது?

..................................................


4. (A) தொழிற்படும்போது அதனைத் தொடர்ந்து இதயத்தில் நடைபெறும் மூன்று தொழில்களைத் தருக?

1.................... 2.................... 3....................

5. இதய இயக்கியைக் கட்டுப்படுத்தும் நரம்புத் தொகுதியின் பகுதியைப் பெயரிடுக?

..................................................

(A) மனித தோலின் ஒரு பகுதியைக் கீழுள்ள படம் காட்டுகின்றது.




1) 1 இலிருந்து 5 வரையான பகுதிகளைப் பெயரிடுக

1.............................. 2.............................. 3..............................
4.............................. 5..............................

2) மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலையின் அளவு என்ன?

..................................................

3) உடல் வெப்பநிலை சாதாரண நிலையவிட அதிகரிக்கும் போது (A) அதனை சீராக்குவதில் எவ்வாறு பங்களிக்கின்றது என்பதை சுருக்கமாகத் தருக?

..................................................

4) உட்தோலில் காணப்படும் இரு வெப்பவாங்கிகளைப் பெயரிட்டு அவை எவ்வாறு வெப்பநிலை மாற்றத்திற்கேற்ப உணர்திறனைக் காட்டுகிறன எனவும் தருக?

| வாங்கிகள் | வெப்பநிலை மாற்றம் |
|---|---|
| 1................ | .............................. |
| 2................ | .............................. |

5) பூச்சிகளில் வெப்பநிலை வாங்கியின் அமைவிடம் ஒன்றைத் தருக?

..................................................

(D) 1. விலங்குகளில் காணப்படும் மூன்று பிரதான வகை வன்கூடுகளையும் தருக?

1.............................. 2..............................
3..............................

2. ஆதாரத்தை வழங்குவது தவிர விலங்குகளின் வன்கூட்டுத் தொகுதியால் மேற்கொள்ளப்படும் தொழில்களைத் தருக?

..................................................

3. தலையோட்டில் காணப்படும் மனிதனுக்குரிய சிறப்பியல்புகள் மூன்று தருக?

..................................................

4. முள்ளந்தண்டென்பிடை வட்டத்தட்டின் தொழில்கள் எவை?

..................................................

5. மனிதனின் இடுப்பு வளையத்தை ஆக்கும் என்புகளைப் பெயரிடுக?

..................................................

4. (A) 1.உயிரின மண்டலத்தில் பற்றிரீயாக்கள் அதிக்ளவில் எங்கும் பரவியுள்ள அங்கிகள் என கருதப்படுவதற்காண ஐந்து காரணங்களைத் தருக?

..................................................
..................................................

2. பற்றிரீயாக்கள் பொதுவாக அவற்றின் வடிவத்தையும் கலங்களின் அமைப்பு ஒழுங்குகளையும் கொண்டே பாகுபடுத்தப்படுகின்றன. அவ் வடிவங்களையும் அமைப்பு ஒழுங்குகளையும் வரைந்து பெயரிடுக.

# களம் பல கண்ட யாழ் கோட்டை


4


## பிலிப் தே ஒலிவேறா

**1621 பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி**

ஒரு தலைமை மேசனின் கீழ் நான்கு துணை மேசன்மார் வேலை பார்த்தனர். கோட்டை கட்டுவதில் சிற்றாளர்களாக வேலை பார்த்த ஊழியக்காரர் ஒவ்வொருக்கும் சாப்பாட்டிற்கு வருடம் ஒன்றுக்கு 70 கண்டி சாமி அரிசி வழங்கப்பட்டது. கோட்டை கட்டும் வேலையைப் பலர் மேற்பார்வை செய்தனர். அவர்களைப் பண்டாரப்பிள்ளைகள் என்றனர். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 8 பணம் சம்பளமாக வழங்கப்பட்டன.

புடைத்து மேலதிக சிறிய கொத்தளங்களாகக் காட்சி தந்தன. அவற்றில் மூன்று அரைவட்ட வடிவிலும் ஒன்று ப வடிவிலும் புடைத்து நின்றிருந்தன. ப வடிவப் புடைப்பை கோட்டையின் தென் அரண்சுவர் கொண்டிருந்தது. தென் அரண்சுவரின் அடி வாரத்தில் யாழ்ப்பாணக் கடலின் அலைகள் மெதுவாகத் தழுவி அலையெறிந்தன. கடனீரேரி ஊடாக வரும் மரக்கலங்கள் தூரத்தில் நங்கூரமிட்டு நிற்க சிறிய வள்ளங்கள் மூலம் கோட்டையின் தென் அரண்சுவரையடுத்துள்ள இறங்கு துறையை அடையக் கூடிய கட்டமைப்புகள் இருந்தன.





**1622ஆம் ஆண்டு கோடைக்கால இறுதி**

போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டை இன்று அழிந்துள்ள கோட்டை போன்று நட்சத்திர வடிவத்தினை/ஐங்கோண வடிவத்தினையுடையதன்று. அது ஒரு சதுர வடிவக் கோட்டையாகும். கட்டப்படவிருக்கும் கோட்டையின் மாதிரி வடிவம் பிலிப் தே ஒலிவேறாவின் முன் வைக்கப்பட்டிருந்தது. அவன் அதனை அடங்க ஆவலோடு நோக்கினான்.

சதுர வடிவமான கோட்டை உயர்ந்த அரண் சுவர்களைக் கொண்டிருந்தது. நான்கு மூலைச் சுவர்களிலும் பலமான கொத்தளங்கள் அமைந்திருந்தன. அவற்றில் வடகிழக்குக் கொத்தளமும் தென்மேற்குக் கொத்தளமும் வேலின் முனைப்பு வடிவிலும் தென்கிழக்குக் கொத்தளமும் வடமேற்குக் கொத்தளமும் முக்கால் வட்டவடிவிலும் அமைந்திருந்தன. இக் கொத்தளங்களை இணைக்கும் அரண் சுவர்கள் (RAMPART)அடித்தளத்தில் 40 அடிகள் அகலமான தாயும் மேற்புறத்தில் 20 அடிகளாக ஒடுங்கி 30 அடிகள் வரை அகழி மட்டத்திலிருந்து உயர்ந்து நின்றன. இந்த அரண் சுவர்களின் மையப்பகுதிகள் நான்கிலும் 20 அடி கள் அகலமான பகுதி வெளிப்புறமாகப்

கொத்தளங்களும் அரண்சுவர்களும் போர் வீரர்களும் யுத்த தளபாடங்களும் இடரின்றி நகரக்கூடிய இடவசதியைக் கொண்டிருந்தன. கொத்தளங்களில் பீரங்கி வெளிகள் அமைந்திருந்தன. கடலை நோக்கிய அரண் சுவரின் இரண்டு பெரிய கொத்தளங்களிலும் மூன்று பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன. ப வடிவச் சிறு புடைப்புக் கொத்தளத்தில் மூன்று பீரங்கிகள் நிறுத்தப்பட்டிருந்தன. இந்தத் தென்னரண்சுவரின் ஒன்பது பீரங்களின் தாக்குதல்களுக்குத் தப்பி எந்த எதிரிக் கலமும் கோட்டையை அணுகிவிடமுடியாது என ஒலிவேறா நம்பி இறுமாந்தான். மேற்குப்புற அரண்சுவரில் ஐந்து பீரங்கிகள் பொருத்துவதற்கான வெளிகளும் வடபுற அரண்சுவரில் நான்கு பீரங்கிகள் பொருத்தக்கூடிய வெளிகளும் காணப்பட்டன. கிழக்குப்புற அரண்சுவர் 10 பீரங்கிகளைக் கொண்டிருந்தது.

இக் கிழக்குப் புறமே தரைப்புறமான கோட்டை வாயிலைக் கொண்டிருந்தது. கோட்டையைச் சுற்றி ஒரு புறம் கடலும் ஏனைய மூன்று பக்கங்களும் 20 அடி அகலமான அகழியைக்கொண்டிருந்தன. ஓர் இணைப்புப் பாலம் தேவைக்கேற்ப இறக்கி தூக்கக் கூடிய விதமாகக் கிழக்கு அகழிக்கும் கோட்டை வாயிலிருக்கும் இடையிலிருந்தது.

கிழக்கு அரண்சுவரில் காவல் கோபுரங்கள் ஆறு அமைக்கப்பட்டிருந்தன. துப்பாக்கி ஏந்திய வீரர்கள் தரைப் புறமான கோட்டை வாயிலை எதிரிகளணுகாது காக்க இவை உதவின. கோட்டையினுள் காமாந்தோர், கப்பித்தான், வேன்ட்றிக்ஸ், கூப்மன்ஸ், ஓண்ட கூப்மன்ஸ், பிரிடிக்கன்ஸ் முதலான போர்த்துக்கேய அதிகாரிகளின் மாளிகைகள் அமைந்திருந்தன. கத்தோலிக்க தேவாலயம், படைவீரர் பாசறைகள் என்பனவும் அமைந்திருந்தன. கடல் நீரை அகழிக்குள் வெகு பக்குவமாக விட்டிருந்தார்கள். கடலிலிருந்து அகழிக்குள் எவரும் நுழைந்துவிடாதிருக்கப் பலமான கம்பிக் கிறாதிகளைத் தடுப்பிட்டிருந்தார்கள்.

மொத்தத்தில் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை பலமும் கம்பீரமும் கொண்ட அதியற்புதமான கட்டமைப்பைக் கொண்டிருந்தது. பிலிப் தே ஒலிவேறா திருப்தியுடன் புன்னகைத்தான். மாதிரி வடிவத்தின்படி கட்டி முடிக்குமாறு கட்டளை பிறப்பித்தான். இது பத்தேவியாவிலுள்ள ஒல்லாந்தக் கோட்டையிலும் பார்க்கப் பெரியது எனப் பின்னர் பால் தேயஸ் சுவாமிகள் வியக்கப்போகிறார்.

கோட்டை கட்டும் செயற்பாடு ஆரம்பமானது. வருடத்தில் ஒன்பது மாதங்களுக்குக் கோட்டை கட்டும் பணி நடந்தது. அகழியில் வெட்டிய மண்ணை அரண்சுவர்களுள் நிரப்பினர். மழை பெய்யத் தொடங்கியதும் கோட்டை கட்டுகின்ற பணி நிறுத்தப்படும். கோடை காலத்திலே ஏற்பட்ட வைசூரியும் மாரி காலத்திலேற்பட்ட பேதி நோயும் சிலவேளைகளில் கோட்டை கட்டுவதைத் தடை செய்தன. எனினும் போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை 1625 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் 150 பறங்கி வீரர்களைக் கொண்ட மூன்று பட்டாளங்கள் இருந்தன. ஒவ்வொரு வீரனுக்கும் அவன் கலியாணமாகாதவனாயிருந்தால் மாதம் ஒன்றுக்கு பன்னிரண்டு பணமும் கலியாணமானவனாயிருந்தால் மாதமொன்றுக்கு 24 பணமும் வழங்கப்பட்டன. அவசியமான காலங்களில் தேவைப்படும் உணவுப் பொருட்கள் கோட்டைக்குள் வேண்டிய மட்டும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டன.கோட்டைக்குள் எப்போதும் 300 கண்டி நெல்லும் அரிசியும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அறுவடைக் காலங்களில் சேமிக்கப்பட்டு வருட முடிவில் விற்கப்பட்டு பின் புது நெல்லும் அரிசியும் வாங்கி வைக்கப்பட்டன. அவ்வாறு சேமித்து வைப்பதற்குப் பந்தாயம் எனப்படும் நெற் கூடைகளைப் பயன்படுத்தினர்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டை போன்று வேறு பகுதிகளிலும் கோட்டைகளை கட்டியுள்ளனர். ஊர்காவற்றுறை (ஹெமன் ஹூல்),காங்கேசன் துறை ,பருத்தித்துறை ,வெற்றிலைக்கேணி , இயக்கச்சி ,ஆனையிறவு முதலான பகுதிகளிலும் இவர்கள் கோட்டைகளை அமைத்தனர். ஆனால் இவை யாழ்ப்பாணக் கோட்டை போன்று பெரியனவல்ல. பிலிப்தே ஒலிவேறா நல்லூரை விட்டகன்று கோட்டை மாளிகைக்குள் தனது படையினரோடும் பரிவாரத்தோடும் குடியமர்ந்தான். கோட்டைக்குக் கிழக்கே பரந்து கிடந்த நிலத்தை தமிழ்க் கத்தோலிக்கர்களுக்கும் பறங்கியருக்கும் பகிர்ந்துகொடுத்தான்.

**செங்கை ஆழியான்**

(தொடரும்)

## ரங்கே பண்டார மீது தாக்குதல் நடத்திய மேலும் ஐந்து சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் மீது தாக்குதல் நடத்திய மேலும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் பாலித ரங்கே பண்டார மீது நடத்தப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதலில் அவர் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து முக்கிய சந்தேக நபர்களை பொலிஸார் ஏற்கனவே கைது செய்துள்ளனர். அவர்கள் ஐந்து பேரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் சிலர் தலைமறை வாகியுள்ளதாகவும் அவர்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் பாலித ரங்கே பண்டார வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் சந்தேக நபர்களை கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விருப்பு வாக்கு தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சில நபர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகளுக்கு சமமாக ஐக்கிய தேசியக் கட்சியும் விசாரணைகளை நடத்தி வருவதாக கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (2-6)

## இலங்கையில் இரவிலும் வெப்பம் ஒரு வார காலத்துக்கு தொடரும்

(கொழும்பு)

இலங்கைக்கு நேராக உச்சியில் சூரியன் இருப்பதன் காரணமாக கடும் வெப்பம் இரவு நேரத்தில் கூடக் காணப்படுகிறது.

இக்கால நிலை இன்னும் ஒரு வார காலத்திற்கு நீடிக்கும் என்று வழி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-6)

## சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க முனைந்த இலங்கையர்கள் மியாமியில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க முனைந்த இலங்கையர்களை மியாமி அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.கப்பல் மூலமாக 14 பயணிகள் இவ்வாறு மியாமி கரையோரத்தின் ஊடாக அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க முயற்சித்துள்ளனர்.

இந்த சட்டவிரோத கும்பலில் இலங்கையர்கள் உள்ளிட்ட சில நாட்டுப்பிரஜைகள் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மியாமியில் கோலவர் கடற்கரையில் வைத்து குறித்த சட்டவிரோத குடியேறிகளை கைது செய்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறெனினும் சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்குள் பிரவேசிக்க முனைந்தபடகுப்பயணிகளில் பலர் நாட்டிற்குள் ஊடுருவி இருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த படகில் 11 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான பஹாமாஸ் நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஜமெய்க்கா, ஹெய்ட்டி மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்குள் செல்ல முற்பட்டுள்ளனர்.

நாட்டிற்குள் ஊடுருவியவர்களை ஹெலிகொப்டர்கள் மூலம் தேடும் பணி தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# வரவேற்கும் அபாயங்கள்

அபாயங்கள் நம்மை வரவேற்கின்றனவா? அல்லது நாம் அபாயங்களை வரவேற்கிறோமா! என்ற கேள்வி இந்த தலைப்பைப் படித்தவுடன் நம் மனதில் எழும் கணனிப் பயன்பாட்டினைப் பொறுத்தவரை இரண்டும் தான் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நம் வாழ்வோடு இரண்டறக் கலந்து கணனி தரும் அபாயங்கள் குறித்து, அறிந்து அதற்கான தற்காப்பு வழிகளை நாம் மேற்கொண்டிருந்தாலும், சில அபாயங்களை நாம் அறியாமலேயே நாம் வரவேற்று மாட்டிக் கொள்கிறோம்.

கிராமப்புறங்களில் வேலியில் போகும் ஓணான் என்று ஒரு பழமொழி தொடங்கும். அந்த வகையில் தான் நாம் நம்மை அறியாமலேயே கணனியில் பல அபாயங்களை வரவழைத்துக்கொள்கிறோம். அவற்றைப் பற்றி இங்கு பார்க்கலாம்.


### அடோப் பலவீனங்கள்

மைக்ரோசொப்ட் புரோகிராம்களுக்கு அடுத்தபடியாக ஒவ்வொரு கணனியிலும் அடோப் நிறுவன அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப்புகள் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருவது உறுதி .பிளாஷ்(Flash) அக்ரோபாட் ரீடர் (Acrobat Reader) அல்லது ஷாக்வேவ் (ShockWabe)என ஏதாவது ஒன்றினை நாம் இன்ஸ்டோல் செய்து வைத்திருக்கிறோம். கணனியைக் கொடுக்கும் மால்வெர் தொகுப்புகளினால் இவை எளிதாகப் பயன்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக இந்த அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப்புகளில் பழைய பதிப்புக்களை நீங்கள் பயன்படுத்தி வந்தால், அவற்றில் உள்ள பலவீனமான இடங்களைப் பயன்படுத்தி மால்வெயர் புரோகிராம்கள் நுழைவது எளிது என உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால் அப்டேட் செய்யப்பட்ட பதிப்புக்களில் தான் இந்த பலவீனமான இடங்கள் சரி செய்யப்பட்டு இருக்கும். பழைய பதிப்புகள் எனில் அவை மால்வெயர் புரோகிராம்கள் எளிதாக நுழைய இடம் தருவதாக அமையும்.

இதில்இன்னொரு வகை பிரச்சினை என்னவென்றால், இணையத் தளங்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், உங்கள அடோப் பிளாஷ் பிளேயர் பழையதாக உள்ளது. அப்டேட் செய்திட இங்கே கிளிக் செய்திடுங்கள் என்று ஒரு செய்தி வரும். கிளிக் செய்தால், கணனி முடங்கப் போய் விடும். (என் சொந்த அனுபவம் இது.)

அல்லது பிரச்சினை இருப்பதாகவும்,




அது குறித்த விளக்கத்தினையும், தீர்வையும் இந்தப் பைலில் பார்க்கலாம் என்று ஒரு பி.டி.எப் பைலுக்கான லிங்க் தரப்படும்.கிளிக்

**இந்த வார டவுன்லோட்**

செய்தால் அவ்வளவுதான். மீண்டும் ஹார்ட் டிஸ்க்கை போர்மட் செய்திடும் அளவிற்குக் கொண்டு செல்லும்.

இதிலிருந்து எப்படி தப்பிக்கலாம்? அடோப் தொகுப்புக்கள் மேம்படுத்தப்பட்டு கிடைப்பதாக இருந்தால், அடோப் நிறுவனத்தின் தளம் சென்று அந்த முயற்சியில் ஈடுபடுங்கள். வேறு தளங்கள் தரும், குறிப்பாக பொப் அப் விண்டோக்கள் தரும் லிங்க் மூலம் செல்ல வேண்டாம். அடோப் தளத்தை பார்த்து அவ்வப்போது அப்டேட் செய்திடுங்கள்.

### ◆ பயர்பொக்ஸ் அட் ஒன்

பயர் பொக்ஸ் பிரவுசருக்கான அட் ஒன் தொகுப்பு புரோகிராம்கள் அபாயத்திற்கான அழகான திறவுகோல்களாகும்.இன்டர் நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பின் அக்டிவ் எக்ஸ்ப்ளக் இன்போல மோசமானது இல்லை என்றாலும், ஆபத் தை விளைவிப்பதில் இவையும் சளைத் தவை இல்லை.

பல மார்வெயர் புரோகிராம்கள், பயர் பொக்ஸ் பிரவுசரின் முதன்மை செயல்பாட்டில் சென்றுவழி தேடா மல் , அட் ஒன் தொகுப்புக்களைத் தான் பார்த்து நுழைகின்றன.

பிளாஷ் பிளே யர், ஒன்லைன மியூசிக் பிளேயர் என ஏதாவது ஒன்றுக்கான அட் ஒன் என்ற செய்தியுடன் இவை உங்களது கவனத் தை ஈர்க்கும். சரி எனக் கிளிக் செய்தால் மாட்டிக் கொள்வோம்.

இத்தகைய தாக்குதல்களிலிருந்து தப்புவது சிரமம்தான். ஏனென்றால் ஆயிரக் கணக்கான அட் ஒன் தொகுப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. இவை தரும் வசதிகளும் பிரமாதமாய் இருக்கின்றன. முதலில் பயன் படுத்துகையில் இவை எந்தத் தீங்கும் விளை விக்காமல் தான் இருக்கின்றன. பின் இவற் றைக் கண்காணித்து மால்வெயார் புரோகிராம்கள், இவற்றைப் பயன்படுத்தி நுழைகின்றன.

இவற்றிலிருந்து தப்பிக்க பயர்பொக்ஸ் பிரவுசரை கணனியில் இன்ஸ்டோல் செய்திடாமல், ஏதேனும் பிளாஷ்டிரைவ் மூலம் போர்ட்டபிள் பிரவுசரைப் பயன்படுத்தலாம்.

### மேக் சிஸ்டம்

பலர் இதுபோன்ற வைரஸ் மற்றும் மால்வெயார் தொகுப்புகள் மேக் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் நுழையாது என்று எண்ணுகின்றனர். இது ஒரு காலத்தில் உண்மையாக இருந்தது. ஏன்னறால் இதனைப் பயன்படுத்துபவர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததால் வைரஸ்களைப் பரப்புபவர்கள் மேக் பக்கம் கவனத்தைச் செலுத்தவில்லை.

இப்போது நிலை மாறிவிட்டது. மேக் சிஸ்டம் வழியாகவும் மால்வெயார்கள் பரவத் தொடங்கிவிட்டன. இந்த சிஸ்டத்திலும் பயன்படுத்தப்படும் அப்ளிகேஷன்களை அவ்வப்போது அப்டேட் செய்திட்டால் மால்வெயர்கள் நுழைவது தடுக்கப்படலாம்.

### ◆ ஆப்பிள் சாதனங்கள்

விண்டோஸ் பெர்சனல் கணனிகளில் நாம் ஆப்பிள் நிறுவன சாதனங்களைப் சொப்ட்வெயர்கள் பயன்படுத்தி வருகிறோம் என்பதை மறந்துவிடுகிறோம். இவற்றையும் மற்ற அப்ளிகேஷன்கள் போலவே நாம் கண்காணிக்க வேண்டும் பல கணனிகளில் குயிக்டைம் மற்றும் ஐ. ட்யூன்ஸ் ஆகிய ஆப்பிள் நிறுவன சொப்ட்வெயர்கள் இடம்பெறுகின்றன. இவற்றில் குயிக் டைம் சாப்ட்வெயர் தொகுப்பைப் பயன்படுத்தி பல வைரஸ்கள் பரவியது நிரூபிக்கப்பட்டுள்ளது.

2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இது அதிகம் இருந்தது. இதனை உணர்ந்த ஆப்பிள் நிறுவனம் அவ்வப்போது இதற்கான தடுப்பு அப்டேட் பைல்களை தானாகவே அனுப்பி சரிசெய்தது. எனவே அப்டேட் செய்வது தான் இங்கு பாதுகாப்பு வழியாகும்.

### ◆ குழப்பும் யு.ஆர். எல்.கள்

மிகப் பெரிய நீளமான இணைய தள முகவரிகளைச் சுருக்கி தரும் லிங்க்குகள் வழியாக மால்வெயர்கள் நுழைவது தற்சமயம் அதிகரித்து வருகிறது. சுருக்கமாகத் தரப்பட்டுள்ள யு.ஆர்.எல். முகவரிகள் எதனைக் குறிக்கின்றன. என்று அறியாமலேயே நாம் அவற்றின் மீது கிளிக் செய்து மாட்டிக்கொள்கிறோம். இதிலிருந்து தப்பிக்க ஒரு தளம் உதவுகிறது. இதன் முகவரி http://longurl.org/.

இந்த தளத்தில் நாம் எந்த ஒரு சுருக்கப்பட்ட இணைய முகவரியையும் தந்து, அது தீங்கு விளைவிக்கக்கூடியதா என அறிந்து கொள்ளலாம்.


### ◆ டி.என்.எஸ். ஹைஜாக்

எண்களில் அமைந்துள்ள முகவரிகளை நாம் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் சொற்களில் அமைக்கும் பணியினை டி.என்.எஸ். சேர்வர்கள் மேற்கொள்கின்றன இந்த மாற்றத்தில் ஈடுபடுகையில் ஏதேனும் ஒரு மால்வெயர் புரோகிராம், டி. என்.எஸ்.சேர்வர் தர இருப்பதனை ஹைஜாக் செய்து, தன்னுடைய மோசமான லிங்கைத் தரும் வேலை தற்போது நடைபெறுவது கண்டறியப்பட்டுள்ளது. இதிலிருந்து தப்ப நாம் எந்த முயற்சியும் எடுக்கமுடியாது. டி.என்.எஸ்.சேர்வர்களை இயக்குவதுதான் மேற்கொள்ளவேண்டும்.

மேலே தெரிவித்தவை நாம் பயன்படுத்தியே ஆக வேண்டிய கணனி சாதனங்கள் தரும் தீய விளைவுகளாகும். இவற்றைப் பயன்படுத்தாமல் இருக்கவும் முடியாது. எனவே கூடுதல் கண்காணிப்பும், மேலே பரிந்துரைக்கும் வழிகளுமே பாதுகாக்கும் கவசங்களாக இருக்கும்.

# மினி எம்பி3 பிளேயர்

கணனியில் பாடல்களைக் கேட்க பெரும்பாலானவர்கள் பயன்படுத்துவது வின் ஆம்ப் பிளேயர். அடுத்ததாக அதிகம் பயன்படுத்தப்படுவது விண்டோஸ் மீடியா பிளேயர். இருப்பினும் இன்னும் பல தேர்ட் பார்ட்டி பிளேயர் புரோகிராம்கள் இணையத்தில் கிடைக்கின்றன. அவற்றில் மிகவும் எளியதாகவும், சிறப்பாகவும் இயங்கும் ஒன்றை அண்மையில் காண நேர்ந்தது. அதன் பெயர் எஸ்.டி.பி. பிளேயர் (STPSystem Tray Player).



இது 200 கேபி அளவிலான சிறிய எக்ஸ்கியூட் டபிள் பிளேயராகக் கிடைக்கிறது. சிறிய அளவிலான பைலைக் கொண்டிருந்தாலும், இதில் உங்கள் பாடல் பைல்கள் அனைத்தையும் கையாள முடியும். கணனியில் மற்ற வேலைகளைப் பார்த்துக்கொண்டிருக்கையில் இசையை, பாடலைக் கேட்டு ரசிக்கும் வகையில் அமைக்கப்பட்டு இயங்குகிறது.

இந்த பைல் இணையத்தில் இருந்து ஒரு ஸிப் பைலாக இறங்குகிறது. சிறிய பைலாக இருப்பதால், கணனியின் ஹார்ட் டிரைவில் எந்த இடத்திலும் பதிந்து வைத்து இயக்கலாம்.இதனை இன்ஸ்ரோல் செய்து இயக்கியவுடன், அதன் ஐகன் சிஸ்டம் ட்ரேயில் வந்து அமர்ந்து கொள்கிறது. இதனுடைய செட்டிஸ் அனைத்தும் STP.INI என்ற பைலில் இது தேக்கி வைத்துக் கொள்கிறது.

சிஸ் ட்ரே ஐகனைக் கிளிக் செய்து இதன் அமைப்பை சிறிய பாராக வைத்துக் கொள்ளலாம். அதனை மொனிட்டர் ஸ்கிரீனில் எங்கு வேண்டுமானாலும் வைத்து இயக்கலாம். இதில் ஒரு மியூசிக் பிளேயரில் வழக்கமாகக் காணப்படும் Play, Pause, Stop,Forward மற்றும் Backward பட்டன்கள் தரப்பட்டுள்ளன. மேலும் பிளே லிஸ்ட், ஈக்குவலைசர், எம்பி3 தகவல்கள், அல்பம் தர எனத் தனித்தனி பட்டன்கள் உள்ளன. இவைதவிர சில செயற்பாடுகளுக்கு நாமும் ஹாட் கீகளை செட் செய்து கொள்ளலாம். இதற்கென ஹாட் கீ ஒன்று கீழாகத் தரப்பட்டுள்ளது.

இந்த எஸ்.டி.பி. எம்பி3 பிளெயரைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய இணைய தள முகவரி:http://stp.byteact.com/



# கணனி உலகில்

ஆர்.யூ.பாலமுருகன்

## சிடியில் எழுதுகிறீர்களா? கவனம் தேவை

(சென்றவாரத்தொடர்ச்சி)

◆பல பேர்னிங் சொப்ட்வெயர் தொகுப்புக்களில் பைல்களை எழுதி முடித்த பின்னர் தகவல்கள் சரியாக எழுதப்பட்டுள்ளனவா என சோதித்து அறியும் டேட்டா வெரிபிகேஷன் என்னும் வழிமுறை தரப்பட்டிருக்கும். இதன்மூலம் எந்தவிதமான பிழைகளும் இல்லாமல் சிடி/டிவிடிக்கள் எழுதப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ளலாம். இருப்பினும் இது 100% உறுதிதானா என்பதனை உறுதியாகக் கூறமுடியாது. நாட்கள் செல்லச் செல்ல இவை பயனற்றுப் போக வாய்ப்புண்டு. எனவே பைல்களை பக்கப் எடுப்பதாக இருந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட சிடி /டிவிடி கொப்பிகள் எடுப்பது நல்லது. அல்லது வேறு ஹார்ட் டிஸ்க்குக ளில் பதிந்து வைப்பதுவும் நல்லது.

மொத்தமாக சிடி/ டிவிடிக்களை சொற்ப விலைக்கு வாங்கிப் பயன்படுத்துவது அந்த நேரத்திற்கு காசை மிச்சம் பண்ணும். ஆனால் காசைக் காட்டிலும் அதிக மதிப்புள்ள தகவல்கள் அடங்கிய பைல்கள் கிடைக்காமல் போய் விடும். எனவே நல்ல நிறுவனங்களின் பெயர்களில் வரும் சிடி / டிவிடிக்களையே பயன்படுத்தவும்.

சிடியில் எழுதி முடித்த பின் ஐ.எஸ்.ஓ. பைல் குறித்து ஒருகேள்வி கேட்கப்படும். நாம் இது என்ன என்று அறியாமலேயே தவிர்த்துவிடுவோம். ஒரு சிடி / டிவிடியில் உள்ள அனைத்து பைல்களின் அட்ங்கலை தோற்றமாகத் தரும் பைல் ஐ.எஸ். ஓ.பைல் ஆகும். பேர்னிங் சொப்ட்வெயர் தொகுப்புக்கள் இந்த பைல்களை நேரடியாக எடுத்துக்கொண்டு அப்படியே சிடி/டிவிடிக் களில் எழுதும் திறன் கொண்டவை. ஒரு சிடி / டிவியில் உள்ள தகவல்களை இன்டர்நெட் வழியே தருவதற்கு இந்தவகை பைல்கள் ஏற்றவை.

எடுத்துக்காட்டாக மைக்ரோ சொப்ட் நிறுவனம் தன்னுடைய ஒப்பரேட்டிங் சிஸ்டத்தினை இந்த வகையிலேயே இன்டர்நெட் வழி தந்தது. பைல்களைச் சுருக்குவதற்கு ZIP. மற்றும் RAR போன்ற பைல்கள் இருந்தாலும் இவற்றை விரித்துப் பின்னர் தான் சிடி/டிவிடிக்களில் பதிய முடியும். ஆனால் ஐ.எஸ்.ஓ பைல்களை பேர்னிங் சொப்ட்வெயர் தொகுப்புகளே விரித்துப் பதிந்துகொடுக்கும். (முற்றும்)

பிறர் மெச்சுவதற்காக செய்யும் செயல் நம்மை நாம் முட்டாளாக ஆக்கிக் கொள் ளத்தான் உதவும். -சுவாமி இராமதாசர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பது கூட்டமைப்பின் தலையாய கடமை

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தம்மை அழைத்தால் அதனை ஏற்றுக் கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தனித்து ஒரு தரப்பினால் முடிவு காணப்படுவதல்ல.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அது தொடர்பில் பேசுவது கட்டாயமானதென்பதால் கூட்டமைப்பின் கருத்துத் தொடர்பில் எவரும் குறைகாண முடியாது.

அதேநேரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுக்களில் தனித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் கலந்து கொள்வதா னது விமர்சனத்திற்குள்ளாகும் வாய்ப்பை உருவாக்கும்.

இதற்கு மேலாக தமிழ் தேசியக் கூட்ட மைப்பு அரசுடன் இணைந்து தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்கின்றதென்னும் குற்றச் சாட்டுக்களும் தாராளமாக வெளிவரும். இவை அனைத்தும் புதியவை அல்ல. இலங்கை அரசியல் வரலாற்றில் சர்வசாதாரணம்.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் மிக நிதானமாக நடந்து கொள்வது கட்டாயமானதாகும்.

கடந்த கால அனுபவங்களில் இருந்து கற்றுக் கொள்வதுதான் இதற்கான ஒரே வழியாகும்.

கடந்த கால வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும் போது இவரால் இனப்பிரச்சினை தீர்ந்ததென்ற நிலைமை இருக்கக் கூடாது என்பதில் எதிர்க்கட்சிகள் மிகவும் நிதானமாகச் செயற்பட்டன.

இதன் காரணமாகவே ஆளும் தரப்பு தீர்வுத் திட்டத்தை தயாரிக்கும் போது, எதிர்த்தரப்பு அதனைக் கிழித்தெறிந்து ரகளை செய்வதைத் தமது கடமையாகக் கருதிக் கொண்டன.

இதற்கப்பால் தமிழ்த் தரப்பும் ஏனைய தமிழ்த் அரசியல் கட்சிகள் பற்றிச் சிந்திக்காமல் தாங்களே உபயகாரர் என்ற இறுமாப்பில் தர்ப்பை தரித்து திருவிழாச் செய்ய முற்பட்டதும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தடைபோட்டன.

ஆகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எங்களுடன் தான் பேசவேண்டும். நாங்கள்தான் அதைச் செய்து முடித்ததாக இருக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கைத் துறந்து,


இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற உயரிய நோக்குடன் செயற்பட வேண்டும். இதற்காக யாரை வேண்டுமானாலும் அணைத்துக் கொள்ளும் பக்குவ நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுமென நம்பலாம்.

தேர்தலில் தோற்றவர்கள் என்பதை காரணமாகக் கொண்டு ஓரங்கட்டும் அரசியல் பழிதீர்க்கும் பாவத்தை செய்யாமல் அனைவரையும் ஒன்றிணைத்து ஓரணியில் திரட்டி, தமிழ் மக்களின் அபிலாசைகளை அடைந்து கொள்ள பாடுபட வேண்டும். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தலையாய கடமையாகக் கருதிச் செயற்படுவது அவசியம்.

# மக்கள் வாக்களிக்கத் தவறியமை ஜனநாயகத்தை பாதிக்கச் செய்யும்

## தமிழரசுக் கட்சி செயலாளர் குலநாயகம் கருத்து

(யாழ்ப்பாணம்)



நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் பெரும்பாலான மக்கள் வாக்களிக்காது போனமை பெரிதும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும். ஜனநாயக ரீதியில் ஒருவருக்கிருக்கும் ஆகக்குறைந்த அடிப்படை உரிமை வாக்களிப்பதேயாகும். அதனைப் பிரயோகிக்கத் தவறின் ஜனநாயகம் பாதிப்படையும்.

இந்த வகையில் கடந்த காலப் பொதுத் தேர்தல்களைவிட மிக முக்கியமான இத் தேர்தலில் தமிழ் மக்களின் அக்கறைக் குறைவினால் பேரினவாதிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.


இவ்வாறு தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ். எக்ஸ். குலநாயகம் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றிருந்தாலும் தமிழ் மக்கள் விரக்தி அடைந்திருக்கும் நிலையும் புலனாகின்றது. இவ் விரக்தி நிலையினைப் போக்க மக்கள் மத்தியில் நம்பிக்கையூட்டும் வகையிலான செயற்பாடுகள் எதிர்காலத்தில் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப்படவேண்டியுள்ளது.

நீண்ட காலம் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டுவரும் நான் இத் தேர்தலில் தெரிவு செய்யப்படாது போனாலும் கட்சியினூடாக எனது சேவை தொடரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பரந்துபட்ட ஒரு அமைப்பாக கட்சியை மாற்றிச் செயற்பட எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில் கட்சியின் நிர்வாகச் செயலாளராகிய நான் தொடர்ந்தும் முழுமூச்சுடன் செயற்படுவேன்.

கட்சிக்கும் எனக்கும் வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி கூறிக் கொள்வதோடு நான் தெரிவாக வேண்டுமென உழைத்த அன்பர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கட்சியில் இணைந்து தமிழ் மக்களின் இலட்சியத்தை நோக்கிப் பயணிக்க முன்வருமாறு இளம் சமூகத்தினரை அன்போடு அழைக்கின்றேன். (ந)

# எனது பணி தொடரும் சிவஞானம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த 08.04.2010ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நான் தெரிவு செய்யப்படாத போதிலும் என்னை ஆதரித்து தெரிவு செய்யப்படுவேன் என்ற நம்பிக்கையோடு எனது தேர்தல் நடவடிக்கைகளில் உதவியவர்கள், வாக்களித்தவர்கள் யாவருக்கும் சிரம் தாழ்த்திய எனது மனமார்த்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்த் தேசியத்திற்கான தங்கள் ஆதரவிற்கும் எனது நன்றிகள்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும் முன்னாள் யாழ். மாநகர சபை ஆணையாளருமான சீ.வீ. கே.சிவஞானம் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என்னை நேசித்து, இந்த மண்ணில் நான் தொடர்ந்து மக்களோடு மக்களாக உங்களுடன் வாழ்ந்தமைக்கு தந்த இந்த அங்கீகாரத்திற்கும் நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் உங்களுடன் இந்த மண்ணில் வாழ்ந்து என்னாலான பணிகளைத் தொடர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (ந)

## வரலாற்றில் முதல்தடவையாக ஐ.நா.அமைதி காக்கும் படையில் இலங்கைப் பெண்கள்

வரலாற்றில் முதல் தடவையாக ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையில் இலங்கை பெண்கள் அங்கம் வகிக்க உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பெண் வீராங்கனைகள் விரைவில் ஐக்கிய நாடு களின் அமைதி காக்கும் படையில் கடமையாற்ற உள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அமைதி காக்கும் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்படும் படையினர் மற்றும் உயரதிகாரி களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மேலதிக படைவீரர்களை கோரினால் அனுப்பி வைக்க இலங்கை இராணுவம் தயார் என தெரிவித்த அவர் யுத்த காலத்தில் இலங்கை படையினர் ஈட்டிய நன்மதிப்பு தொடர்ச்சியாக பேணப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்க விதிகளை பேணுவதில் படையினர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென தெரிவித் துள்ளார். (2-4)

## ஐ.தே.கட்சியின் புதிய மாவட்ட தலைவர்களை தெரிவு செய்வதற்கான நியமனம்

### 22ம் திகதிக்கு முன் வழங்கப்படுமென அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய மாவட்டத் தலைவர்களை தெரிவு செய்யும் நியமனம் எதிர்வரும் 22 திகதிக்கு முன்னதாக வழங்கப் படுமென கட்சியின் தவிசாளர் காமினி ஜெயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலின் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் சிரேஷ்ட தகமையின் அடிப்படையிலும் நியம னங்கள் வழங்கப்படவுள்ளது என்றும் கூறி னார்.

இதேவேளை 9 மாவட்டங்களின் கட்சி யின் தலைவர்கள் பொதுத்தேர்தலில் தோல் வியடைந்துள்ளனர். இதனிடையே காலி, மாத்தறை, நுவரெலியா, மாத்தளை, கம்பஹா, அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் கட்சியின் தலைவர் பதவிக்கு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் காமினி ஜெயவிக்கிரம மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

# கடவுளின் கரங்களில் உங்களை ஒப்படைத்து விடுங்கள்-பாபா

வெற்றியோ, தோல்வியோ அவன் அளிக்கட்டும். அதனாலென்ன? அவர் உங்களைச் சிரமப்படுத்துவதில் உறுதியாயிருக்கலாம். முடிவில் பார்க்கும்போது அது உங்கள் நன்மைக்காகவே கூட இருக்கலாம். உங்களால் எப்படி அதை அறிந்துகொள்ள முடியும்? நீங்கள் யார் அதை அறிய? சிறப்பாகச் செயல் புரிந்துவிட்டுச் சும்மாயிருங்கள்!

நீங்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வாழ புதிய வீடுகள் கட்டிக்கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். அங்கே கடவுளைப் பிரதிஷ்டை செய்து வைக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன். நான் சொல்லுவது செங்கல்,சுண்ணாம்பு வீடு அல்ல. நல்ல எண்ணங்கள், நல்ல சொற்கள், நல்ல செயல்கள், நல்ல சுற்றம். அங்கே நீங்கள் அமைதியாக வாழ இயலும். அனைவரும் கூட்டாக அந்த வீடு கட்டி கிரகப்பிரவேசத்திற்கு என்னை அழைக்க முடியும். நான் ஆர்வமுடன் இசைவேன் . அவ்வீடுகள் என்னுடையவை. நான் வந்து உள்ளே நுழைய அழைப்புகூடத் தேவையில்லை. ஆன்மீக ஆனந்தத்துக்கான வீடு அது ! என் இருப்பிடம் என்னை விரும்பும் தூய இதயம்தான். பக்தி உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும். கடவுளின் கருணையைக் கொண்டு வரும். மேகங்கள் திரண்டு, வயல்கள் மீது மழை பொழிய வேண்டும்இ உயிரூட்டும் நீரைத் தாவரங்கள் மேலெழுந்து பருக முடியாது. பக்தி கடவுளைக் கீழே நம்மிடம் கொண்டு வரும் ஆற்றல் பெற்றது.



பக்தன் தன் உடல், மனம் , வாழ்வு அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விட்டால் அவர் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வார். ஏனென்றால் அவர் எப்போதும் நம்முடனேயே இருப்பார்.

ஜெய்சாயிராம் யாதவன்

### ஏ.ஜே.எம்.முஸம்மிலுக்கு

## தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் என வேண்டுகோள்

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளருமான ஏ.ஜே.எம். முஸமிலுக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஐக்கியதேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கொழும்பில் இயங்கிவரும் பல்வேறு சமூக சேவா அமைப்புக்கள், முஸ்லிம் பள்ளி வாசல்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மகஜர்களை அனுப்பியுள்ளதாக இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஏ.ஜே.எம். முஸமில் சுமார் 38 ஆயிரம் வாக்குகளைப் பெற்று 9 ஆவது இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு 7 ஆசனங்கள் மட்டுமே கிடைத்திருந்தன.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பில் போட்டியிட்ட 3 ஐக்கிய தேசியக்கட்சியின் முஸ்லிம் வேட்பாளர்களும் தோல்வி கண்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கொழும்பு மத்திய தொகுதியில் ஏனைய முஸ்லிம் வேட்பாளர்களை விட முஸமில் முன்னணியில் காணப்படுகின்றனார். இவருக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மத்திய தொகுதி அமைப்பாளர் பதவியும் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## நாவலப்பிட்டியில் பாதுகாப்பு தீவிரம்; விசேட அதிரடிப்படை சேவையில்

(கொழும்பு)

நாவலப்பிட்டிய பகுதிக்கு 400 வீரர்கள் அடங்கிய விசேட அதிரடிப்படை அணியொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்பும் தேர்தல் தினத்திலும் அதன் பின்னரும் தொடர்ந்து அரசியல் ரீதியான பல அசம்பாவிதங்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்ததை அடுத்து பொலிஸ் மா அதிபர் இந் நடவடிக்கையை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள மீள் வாக்களிப்பு வரை சிறந்த பாதுகாப்பினை வழங்கும் பொருட்டே மேற்படி அணி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதிக்குப் பின்னர் இது வரை மனோகணேசன் ஏ.ஆர்.எம். அப்துல் காதர் , திலும் அமுனுகம உட்படப் பல அரசியல்வாதிகளின் ஆதரவாளர்கள் மற்றும் வாகனங்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

20ஆம் திகதி இடம்பெறவுள்ள மீள் வாக்களிப்புக்கான பிரசாரப் பணிகளை நாளை மறுதினம் நள்ளிரவு வரை முன்னெடுக்க முடியும் என்பதனால் அதுவரை இடம் பெறும் அரசியல் கூட்டங்கள் மற்றும் பிரசாரப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இவ் விசேட அதிரடிப்படை சேவையாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. (2-6)

### போலி விசாவைப் பயன்படுத்தி

## இத்தாலி செல்ல முயன்ற மீசாலை இளைஞனுக்குப் பிணை

(கொழும்பு)

போலி விசா பதியப்பட்ட கடவுச் சீட்டை பயன்படுத்தி இத்தாலி நாட்டுக்குச் செல்ல முயன்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்தேக நபரை 20 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் மூன்று இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்வதற்கு நீர்கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் , மீசாலையைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு பிணையில் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டவராவர்.

கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி சந்தேக நபர் போலி விசா பதியப்பட்ட கடவுச் சீட்டைப் பயன்படுத்தி இத்தாலி செல்வதற்கு முயற்சி செய்த போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக இரகசிய பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். . (2-6)

### சட்டவிரோதமாக

## அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டோர் பேருவளைப் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் படகுகளின் மூலம் அவுஸ்திரேலியா நோக்கிச் செல்ல முற்பட்ட கும்பல் ஒன்றை பேருவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சட்டவிரோத படகில் சுமார் 45 பேர் பயணிக்க முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு பாசிக்குடா கடலிலிருந்து இது புறப்பட்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

25 நாட்களுக்கு போதுமான உண மற்றும் நீர் போன்றவை குறித்த படகில் சேமிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையர்கள் மற்றும் ஆப்கானிஸ்தானியர்களுக்கு புகலிடம் வழங்குவது தொடர்பில் அவுஸ்திரேலியா புதிய நடைமுறைகளை அறிவித்து 24 மணித்தியாலயங்கள் கடந்த நிலையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (2-4)


### 1500 மலேசிய தமிழர்கள் வெளிநாட்டு சிறைகளில் உள்ளனர்

மலேசிய தமிழர்கள் ஆயிரத்து 500 பேர் போதை பொருள்கடத்தல், கடனட்டை மோசடி ஆகிய குற்றங்களுக்காக வெளிநாட்டு சிறை களில் இருக்கிறார்கள். இந்த தகவலை மலே சியாவின் வெளிநாட்டு இலாகா துணைமந் திரி கோகிலான் பிள்ளை தெரிவித்தார். அவர் கள் அனைவரும் 20 முதல் 35 வயதுக்கு உட் பட்டவர்கள் ஆவார்கள்

மலேசிய தமிழர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவது அதிகரித்து இருப்பது அந்த நாட்டு சமுதாயத்தலைவர்களிடம் கவலையை ஏற்படுத்தி உள்ளது. பள்ளிக்கூடங்களில் நீதி வகுப் புகளை நடத்த வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (2-6)



# ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்திய பெங்களூர் அணிக்கு அரையிறுதி வாய்ப்பு



(ஜெய்ப்பூர்)

பீற்றர்சனின் அதிரடியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் இருபது-20 கிரிக்கெட் தொடரில் லீக் சுற்றின் 49ஆவது போட்டி நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்றது.

இப் போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 130 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் ரயுட் 20 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 32 ஓட்டங்களையும் வோக்ஸ் 27 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 28 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் ஷேன்வோட்சன் 22, ஜோன்ஜோன்வல 13, யூசுப்பதான் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்கஜ் சிங் 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், வினேய்குமார், ஜக்கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 131 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி பீற்றர்சனின் அதிரடி அரைச்சதத்தின் மூலம் 15.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 132 ஓட்டங்களைக்குவித்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் கெவின் பீற்றர்சன் 29 பந்துகளில் (10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 62 ஓட்டங்களையும் றொபின் உத்தப்பா 21 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 26 ஓட்டங்களையும் பாண்டி, ஹோலி ஆகியோர் தலா 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திரிவெடி 2 விக்கெட்டுக்களையும் காம்ரன்கான், அணித்தலைவர் ஷேன்வோர்ன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 7ஆவது வெற்றியைப் பெற்று 14 புள்ளிகளைப் பதிவு செய்து இரண்டாவது இடத்திற்கு முன்னேறியது.

இதன் மூலம் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டது.

இதேவேளை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 13ஆவது போட்டியில் 7ஆவது தோல்வியைச் சந்தித்தது.

இதன் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி அரையிறுதி வாய்ப்புக்காக அடுத்த போட்டியில் கட்டாயம் வெற்றிபெறுவதுடன் சென்னை சுப்பர் கிங்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்ஜாஸ், டில்லி டேர் டேவில்ஸ் அணிகள் இனிவரும் போட்டிகளில் தலா ஒன்றில் தோல்வியை சந்திக்கவேண்டும்.

## அணிகளின் தரவரிசை

| DLF Indian Premier League அணிகள் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் | ஓட்டவிகித சராசரி |
|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 9 | 3 | 0 | 18 | + 1.116 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 13 | 7 | 6 | 0 | 14 | + 0. 467 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 12 | 6 | 6 | 0 | 12 | + 0.348 |
| டில்லி டேர்டேவில்ஸ் | 12 | 6 | 6 | 0 | 12 | + 0.024 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 6 | 7 | 0 | 12 | - 0.421 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 12 | 6 | 6 | 0 | 12 | - 0.438 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 12 | 5 | 7 | 0 | 10 | - 0.632 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 12 | 4 | 8 | 0 | 8 | - 0.484 |

# டெஸ்ட் போட்டிக்கு எந்த ஆபத்தும் இல்லை

## ஐ.சி.சி. நிறைவேற்று அதிகாரி கருத்து

(புதுடில்லி)

வேகமாக பிரபலமாகிவரும் இருபது-20 கிரிக்கெட் போட்டியால் பாரம்பரியமான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று சர்வதேச கிரிக்கெட் சபை தலைமை செயலதிகாரி ஹாரூன் லார்கட் கூறினார்.

இருபது-20 உலக கோப்பை அறிமுக நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர். இது குறித்து டெல்லியில் நேற்று கூறியதாவது,

விறுவிறுப்பான இருபது-20 கிரிக்கெட்ரசிகர்களிடையே மிகவும் பிரபலமாகி வருகிறது. இது வரைகிரிக்கெட் விளையாடப்படாத நாடுகளில் கூட இருபது-20 போட்டி மீது ஆர்வம் ஏற்பட்டுள்ளது. ஆதே சமயம் பாரம்பரியமான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கு இருபது-20 போட்டிகளால் எந்த ஆபத்தும் இல்லை.

மேற்கிந்தியத்தீவில் நடக்கவுள்ள உலக கோப்பை இருபது-20 தொடருக்கான டிக்கெட் கட்டணம் குறைவாகவே இருக்கும். இதனால் போட்டிகளைக் காண ஏராளமான ரசிகர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம் வீரர்களின் பாதுகாப்பிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறோம் இவ்வாறு லார்கட் கூறியுள்ளார்.

# கிரிக்கெட் அணி மீதான தாக்குதல் குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு இல்லை

## இலங்கை அரசை சாடுகிறது பாகிஸ்தான்

(அபுதாபி)

கிரிக்கெட் வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் உரிய ஒத்துழைப்பை வழங்கத் தவறியுள்ளதாக பாகிஸ்தான் குற்றம் சுமத்தியுள்ளது.

2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி லாகூரில் வைத்து இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பயணித்த பஸ் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் நான்கு பாகிஸ்தான் காவல்துறையினர் உயிரிழந்துள்ளதுடன் இலங்கை கிரிக்கெட் அணியின் சில வீரர்கள் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து பாகிஸ்தான் பாதுகாப்பு தரப்பினர் மேற்கொண்டுவரும் விசாரணைகளுக்கு இலங்கை உரிய ஒத்துழைப்பு வழங்கத் தவறியுள்ளதென பாகிஸ்தானிய உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலீக் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமை குறித்து பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவரிடம் முறைப்பாடு செய்யப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரட் லீ–பிரீத்தி ஜிந்தா காதலா? ஐ.பி.எல். தொடரில் பரபரப்பு



(மெல்போர்ன்)

பாலிவூட் நட்சத்திரம் பிரீத்தி ஜிந்தா, அவுஸ்திரேலிய வேகப்புயல் பிரட் லீயை காதலிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியின் உரிமையாளர்களில் ஒருவர் பாலிவூட் நடிகை பிரித்தி ஜிந்தா.

ஐ.பி.எல். தொடரில் பஞ்ஜாப் அணி சார்பில் விளையாடி வருகிறார் பிரட் லீ. உரிமையாளர், வீரர் என்ற நிலையில் இருந்த இவர்களது பழக்கம் காதலாக மாறியுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

ஆனால் இதை பிரட் லீயின் முகாமையாளர் மாக்ஸ்வெல் மறுத்துள்ளார்.

இது குறித்து இவர் கூறியதாவது, கடந்த சில ஆண்டுகளுக்கு முன், லண்டனில் நடந்த திரைப்படவிருது வழங்கும் விழாவில் பிரீத்தியை சந்தித்தார் பிரட் லீ. அது முதல் இருவரும் நட்புமுறையில் பழகி வருகின்றனர். தற்போது அவரது அணியிலேயே பிரட் லீ விளையாடி வருகிறார்.

இருவருக்கும் இடையிலான உறவு, தொழில் தொடர்பானது.


பிரீத்தி அறிவுமிக்கவர். ஊடகங்கள் வெளியிடும் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. இவ்வாறு மாக்ஸ்வெல் தெரிவித்தார்.

...நகர சபை, யாழ்ப்பாணம்.



# மரண அறிவித்தல்கள்

## கிருஸ்ணபிள்ளை சுந்தரலிங்கம்



மண்டைதீவு 06ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சுந்தரலிங்கம் 13.04.2010 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை சுகிர்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற இராசையா மற்றும் அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாம்பிகை, கதிர்மலர், இராஜேஸ்வரி, சண்முகராசா, பரமேஸ்வரி, கோகுலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற லிங்கப்பிள்ளை மற்றும் சிவசம்பு, சற்குணநாதன் ,சிவமலர், சிவராசா, குணராசா, விக்னேஸ்வரி, ஜெயராசா, கமலேஸ்வரி, ரமணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.04.2010 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அல்லைப்பிட்டி-02 (இ) குடும்பத்தினர்.

## பிரபாகரன் பிரேமலோஜினி



சீனியர் லேன் கலட்டி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபாகரன் பிரேமலோஜினி 2010.04.13 அன்று காலமாகிவிட்டார்.

இவர் பிரபாகரனின் அன்பு மனைவியும் சஜித், விஷால் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம் ரஞ்சிதமலர் ஆகியோரின் அருமைப் புதல்வியும் கணபதிப்பிள்ளை இராசமணி ஆகியோரின் அன்பு மரு மகளும்,

சந்திரமோகன், நாகலோஜினி, ராஜ்மோகன், மீனலோஜினி (பிரான்ஸ்), அமுதலோஜினி, கமலலோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

பிறேமராஜ் (யப்பான்), பிறேமராணி (இத்தாலி), கார்த்திகேசன் (லண்டன்) காலஞ்சென்ற பிரதீபன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் உதயகுமாரி, சுகேஸ்குமார், உதயகுமார் (பிரான்ஸ்), முகுந்தன், சசிக்குமார், கில்டா ஆகியோரின் அருமை மைத்துனியும், றஜனி, விக்னேஸ்வரன் (இத்தாலி), பபிதா (லண்டன்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும், தட்சாயினி, டிலக்சாயினி, கம்சாஜினி, சாத்திகா, கருசின் (லண்டன்), கபிசன், கார்த்திகன், கர்ஸ்மினா ஆகியோரின் அருமை சித்தியும், சுஸ்மிதன் (இத்தாலி), கஜானன், கஜனிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

2010.04.15ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

தகவல்: (இ) குடும்பத்தினர்.

கலை, வர்த்தக பிரிவுகள் A/L 2012 ஏப்பிரல் - 17 காலை 9.00 மணி DMI JAFFNA

## புலிகளின் எரிபொருள் தொகுதி புதுக்குடியிருப்பில் மீட்பு

புதுக்குடியிருப்புப் பகுதியில் விடுதலைப்புலிகளின் பாரியளவு எரிபொருள் தொகுதியொன்றைப் பொலிஸார் கடந்த வாரம் மீட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நிலத்துக்குக் கீழ் மிகவும் நுட்பமான முறையில் குறித்த எரிபொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

18 அடி நீளமும் 8 அடி ஆழமும் கொண்ட பாரிய தாங்கியொன்றில் 25 ஆயிரம் லீற்றர் எரிபொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## இலங்கைப்...

அரசியல் கைதிகள் விடுதலைக் குழுவை சார்ந்த பேராசிரியர் கிலானி, காஷ்மீர் அனைத்து கட்சி ஹுரியத் குழு சையுத் அலிஷா கிலானி ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்கேற்கிறார்கள்.

உலக சீக்கிய செய்திகள் ஆசிரியர் ஜக் மோன் சிங், அனைத்துலக மக்கள் போராட்ட லீக்கின் துணைத் தலைவர் சாய் பாபா, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியை சார்ந்த கவிதா கிருஷ்ணன் போன்ற முக்கிய அரசியல் தலைவர்களும் பங்கு கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர். (ந-5)

## கடந்த...

தமிழ், சிங்களப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு யாலிய விக்கிரமசூரிய வெளியிட்டுள்ள விசேட வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் தந்திரோபாயங்கள் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் ஆகியவற்றை உலக நாடுகள் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளன.

பழையவற்றை மறந்து புதிய ஓர் சகாப்தத்தை நோக்கிச் செல்ல வேண்டிய காலம் மலர்ந்துள்ளது. அமெரிக்காவில் வாழும் இலங்கையர்கள் ஒரே சமூக மாக அணி திரள வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற 2 முக்கியமான தேர்தல்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றி கிட்டியுள்ளதாகவும் அதன் மூலம் மகிந்த சிந்தனைகளை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளமை புலப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசு மீது போர்க் குற்ற விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்பதில் அமெரிக்கா இறுக்கமாக இருக்கும் நிலையில், அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரின் மேற்கண்ட கருத்து இலங்கை அரசின் உயர்மட்ட ஆலோசனையில் வெளியிடப்பட்டதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இதேவேளை இலங்கை அரசு மீதான போர்க் குற்ற விசாரணையை அமெரிக்கா முன்னெடுப்பதைத் தடுப்பதில் இலங்கை அரசு பல்வேறு உபாயங்களைக் கையாண்டு வருவதாகவும் ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-5)

## சவுதி அரேபியாவில் மோதல் இலங்கையைச் சேர்ந்தவர் பலி

(கொழும்பு)

சவுதி அரோபியாவில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இலங்கையர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சவுதி அரேபியா ஜித்தா கந்தஹார் பாலத்திற்கு அடியில் தங்கியிருக்கும் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்தோனேஷியப் பிரஜைகளுக்கும் இலங்கையர்களுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் குறித்த இலங்கையர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல் சம்பவத்தில் மேலும் சிலர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பொது முகாமையாளர் எல்.கே.ருஹுணுகே தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சவுதி அரேபியப் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-5)

## ஆளும் கட்சி ஆதரவாளர் புத்தளத்தில் கொலை

(கொழும்பு)

புத்தளம் பிரதேசத்தில் ஆளும் கட்சி ஆதரவாளர் ஒருவர் அதே கட்சியைச் சேர்ந்த நபர் ஒருவரினால் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளம் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த இந்திராணி பண்டாரநாயக்கவின் ஆதரவாளர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரின் ஆதரவாளர்களே இந்தப் படுகொலையை மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆனமடுவப் பிரதேசத்தில் வைத்து இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் 19 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்கள் மறைந்த அமைச்சர் டி.எம்.திஸாநாயக்கவின் பாரியாரது ஆதரவாளர் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (ந-5)

## ஜெனரல்...

ரைத் தலைவராக்கினால் அவருக்குரிய பாதுகாப்பும் நடைமுறைக்கு வரும் என்பது ஐ.தே.மு. நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாதமாகவுள்ளது. (ந-5)

## போரில்...

புலிகளுமே பொறுப்பேற்க வேண்டுமெனத் தொழிற்கட்சி உறுதியாக நம்புவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

## அமைச்சர்...

வர்கள் என்ற அடிப்படையிலோ அல்லது குடும்ப உறவுகள் காரணமாகவோ எவருக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட மாட்டாது என மகிந்த ராஜபக்ஷ தனது நெருங்கியவர்களிடம் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. (ந-5)


காணி விற்பனைக்கு

யாழ். நகருக்கு சுமார் 4Km தூரத்தில் நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்பு மிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய சுமார் 4 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்புகளுக்கு:-

077 2469015, 072 5682849, 078 6711952

(1125)

"தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்."

வாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள்!!!

வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷ ஆராதனைகளும்

2010 ஏப்ரல் 14 ஆம் திகதி

புதன் மாலை முதல் 18 ஆம் திகதி ஞாயிறு வரை

தினமும் மாலை 5.30 மணிக்கு

இலங்கை பெந்தெகொஸ்தே சபைச்சாலை,

111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பிசாசின் பிடி, பாவம், மதுபானம், புகைத்தல், பில்லிசூனியம், கொலை இன்னும் தீய பழக்கவழக்கங்களிலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம், சந்தோஷம், பாவமன்னிப்பு தருகிறார்.

இலவச உட்பிரவேசம்!

காணிக்கை சேர்க்கப்படமாட்டாது!!

வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப்படும்!!!

(1185)

2012 A/L பொருளியல்

புதிய பிரிவு ஆரம்பம்

சனி-9 மணி (17.04.2010)

DMI JAFFNA

By S.S சிறி (B.Com)

English Medium ECONOMICS CLASS ( Sat : 12 - 1)

2011 A/L பேரினப் பொருளாதாரம் 2010 A/L Paper Class

(சி-056)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.